விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 22 செவ்வாய்க்கிழமை (07.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 231

## பவுசருடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

### கைதடி - கோப்பாய் வீதியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

கைதடி- கோப்பாய் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை பின்னால் வந்த எரிபொருள் பவுசர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன், அவருடன் பயணித்த மகள் படுகாயமடைந்த 23☛

## திருப்பதிக்கு பலாலியிலிருந்து விமான சேவை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் - பலாலி விமான நிலையத்தில் இருந்து இந்தியாவின் திருப்பதிக்கான விமான சேவை இந்த ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் தகவல்கள் 23☛

## மின்சாரத்தடை திட்டமிட்ட சதி!

### பெற்றோர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர பரீட்சை ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் வட பகுதியில் மின்தடையை அமுல்படுத்துவது என்பது வேண்டும் என்றே செய்யப்படும் சதி வேலை என பெற்றோர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சை நடைபெறுகின்ற காலங்களில் மின்தடையை அமுல்படுத்தி அதன் 23☛

## சமூக வலைத்தளங்களை பயன்படுத்தியே யாழில் சட்டவிரோதக் குழுக்கள்

# வன்முறை கலாசாரத்தை உருவாக்கி வருகின்றன

### யாழ் மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

**(யாழ்ப்பாணம்) யாழ் மாவட்டத்தில் வாள்வெட்டில் ஈடுபடும் சட்டவிரோத குழுக்கள், சமூக வலைத்தளங்கள் ஊடாக வன்முறை கலாசாரத்தை உருவாக்கி வருகின்றன என சிவில் பாதுகாப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

யாழ் மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதன்போது. பொலிஸார் மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் பல்வேறு வன்முறை சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இவர்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக தமக்கென்று வலையமைப்பை உருவாக்கி செயற்படுகிறார்கள்.

கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்களும் பிணையில் வந்து துணிவாக குற்றச்செயல்களை செய்கிறார்கள். 23☛

## கடந்த 24 மணி நேரத்தில் விபத்தில் 13 பேர் பலி

(கொழும்பு)

கடந்த 24 மணி நேரத்தில் சில பிரதேசங்க 23☛

### மனிதாபிமானமின்றி

## விபத்தின்போது தொலைபேசி திருட்டு

(யாழ்ப்பாணம்)

விபத்தில் படுகாயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிப்பதாக கூறி தொலைபேசியை பெற்ற நபர் தொலை 24☛

### சட்டவிரோதமாக

## வெளிநாடு செல்ல முயற்சித்த 21 பேர் நேற்றுக் கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான கடற் பயணத்தின் ஊடாக வெளிநாடு செல்ல முற்பட்ட 21 23☛

## எதிர்க்கட்சி பதவி தொடர்பில் சபாநாயகரே தீர்மானிக்க வேண்டும் - இரா.சம்பந்தன்



(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பாக சபாநாயகரே தீர்மானம் ஒன்றினை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலை 24☛

### இயக்கச்சியில் ஹயஸ் வான் கோர விபத்து

## லண்டனிலிருந்து வருகை தந்த பெண் உட்பட இருவர் உயிரிழப்பு



(கரணவாய்)

கிளிநொச்சி ஏ9 வீதி, இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் லண்டனில் இருந்து வந்த குடும்பப் பெண் உட்பட இருவர் பலியானதுடன் 5 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில், 23☛

### தி.மு.க தலைவர்

## கருணாநிதி கவலைக்கிடம்

(சென்னை)



முன்னாள் முதலமைச்சரும் தி.மு.கவின் தலைவருமான கருணாநிதியின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க தலைவர் 23☛

### கடந்த இரு வார காலப்பகுதியில்


## வன்முறையுடன் தொடர்புபட்ட 22 பேர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டில் கடந்த இரு வாரங்களுக்குள் இடம்பெற்ற பெரும் வன்முறைச்சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என தெரிவித்த பொலிஸ் ஊடக பேச்சாளர், யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.எஸ். ஜயசுந்தர, அனைத்து பொலிஸ் நிலையங்கள் ஊடாகவும் 3 விதமான விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். 23☛

## சுயநல அரசியல்வாதிகளால் நல்லிணக்கம் சீர்குலைவு!

### அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் நல்லிணக்கம் வரலாற்று தொடக்கம் சீராக காணப்பட்டாலும் சுயஇலாபத்துக்காக அரசியல்வாதிகள் தெரிவிக்கும் கருத்துக்களின் விளைவாகவே இலங்கையில் நல்லிணக்கம் சீர்குலைவதற்கு பிரதான காரணமாகும் என மீள் 23☛

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# வலி.மேற்கு பகுதியில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் தொடர்பாக விசேட கூட்டம்

## மக்களின் கருத்தறிய பொலிஸார் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பகுதியில் அண்மைக்காலமாக மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கியுள்ள மர்ம மனிதர்களின் நடமாட்டம் தொடர்பாக, பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிவதற்கு விசேட கூட்டம் ஒன்றை பொலிஸார் ஏற்பாடு செய்துள்ளனர்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டம் நேற்று யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மர்ம மனிதர் நடமாட்டம் தொடர்பாக பேசப்பட்டது.

அவ்விடயம் குறித்து வலி.மேற்கு பிரதேச சபை தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

அராலி, மூளாய் பகுதிகளில் கடந்த சில நாட்களாக மர்ம மனிதர்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. இரவு 7 மணி தொடக்கம் அதிகாலை 3 மணிவரை மர்ம மனிதர்களை கலைத்து திரிவது தான் அப்பகுதி மக்களின வேலையாக தற்போது உள்ளது. நிம்மதி அற்ற வாழ்க்கையை அப்பகுதி மக்கள் தற்போது வாழ்ந்து வருகிறார்கள்.

உயர்தர பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்த குழப்பகரமான செயற்பாடுகள் மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்தோம். அவர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். ஆனால் அவர்கள் வந்து சென்ற பின்னர் மர்ம மனிதர்களின் அட்டகாசம் ஆரம்பமாகிறது.

கரையோர பகுதிகளில் இருந்து ஆரம்பித்த இந்த குழப்பகரமான சம்பவம் படிப்படியாக ஊருக்குள் பரந்து காணப்படுகிறது. பொலிஸார் களத்துக்கு வந்து செயற்பட வேண்டும். மக்களுடன் இது தொடர்பாக ஆராய வேண்டும். இரவில் தூக்கம் இன்றி பொதுமக்கள் நிம்மதி இன்றி வாழ்கிறார்கள். இது உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த பொலிஸ் அத்தியட்சகர்,

வட்டுக்கோட்டை பொலிஸார் இந்த விடயம் குறித்து அறிந்திருந்தனர். ஆனால் இது வரை மர்ம மனிதர்கள் தொடர்பாக முறைப்பாடு எதுவும் பதிவுசெய்யப்படவில்லை.

அத்துடன் அவ்வாறான சம்பவம் இடம்பெற்றதாக கண்டவர்களும் பொலிஸாருக்கு தகவல் வழங்கவிலலை. பொதுவாக கதைகள் பரவுவது போன்று இந்த விடயம் பொலிஸாருக்கும் தெரிய வந்தது.

ஆனால் விசாரணைகளை மேற்கொண்ட போது யாரும் இது குறித்து விளக்கமாக தெரிவிப்பதாக இல்லை. எனவே இவ் விடயம் குறித்து பொலிஸார் பொதுமக்கள் இணைந்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் எமக்கு அறிய முடியும் என தெரிவித்தார்.

தொடர்ந்து இந்த விடயம் தொடர்பாக சங்கானை பிரதேச செயலர் கருத்து தெரிவிக்கையில், எனக்கும் இந்த விடயம் குறித்து பொதுமக்களால் அறிவிக்கப்பட்டது. மர்ம மனிதர்கள் வீடுகளுக்கு கற்களால் வீசித்தாக்குதல் மேற்கொள்கிறார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்ட சில வீடுகளுக்கு வந்து செல்கிறார்கள் எனவும் தெரியப்படுத்தப்பட்டது.

ஆனால் அவர்கள் சம்பவங்களை அடையாளப்படுத்தக்கூடிய வகையிலும் சம்பவங்களை நேரில் பார்த்ததாகவும் தெரிவிக்கவில்லை. ஆனால் மர்மமனிதர்கள் நடமாட்டம் இருப்பதை உணர்கிறார்கள் என்றும் இது குறித்து பொலிஸாருக்கு தெரிவிப்பதற்கு பயப்படுகிறார்கள்.

பொலிஸார் பொதுமக்களுடன் நேரடியாக கலந்துரையாடல் மேற்கொண்டால் குறித்த செயற்பாடு கட்டுப்படுத்தப்படும் என பொது மக்கள் விரும்புவதாக தெரிவித்தார்.

இவர்களின் கருத்துக்களை தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு நாளை 8ஆம் திகதி 3 மணிக்கு வட்டுக்கோட்டை அராலி அம்மன் கோவிலில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது. அந்த கலந்துரையாடலில் மக்கள் தமது பிரச்சினைகளை நேரடியாக தெரிவிக்க முடியும் எனவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# குற்றச் செயல்களுக்கு எதிராக விசேட சட்டம் உருவாக்கப்படவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

குற்றச்செயல்களுக்கு எதிராக விசேட சட்டம் உருவாக்கப்பட்டு உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டால் மாத்திரமே வன்முறைகளை தடுக்க முடியும் என மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டம் நேற்று யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றச்செயல்களை தடுப்பது தொடர்பாக கலந்துரையாடல்கள் மேற்கொண்டால் மாத்திரம் வன்முறைகளை கட்டுப்படுத்த முடியாது. இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, படிப்படியாக இந்த நாடு முழுவதும் பரவும். அதன் ஊடாக சர்வதேசம் வரை விரிவடைந்து செல்லும். எனவே இதை சாதாரணமாக பேசி கட்டுப்படுத்த முடியாது.

ஜனாதிபதி பிரதமருடன் பேசி அவர்களுக்கு இந்த விடயம் குறித்து அறிவிக்க வேண்டும். வன்முறைச்சம்பவங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு அவர்கள் மூலம் விசேடமான சட்டம் உருவாக்க வேண்டும். அதன் மூலமே குற்ற செயல்களை கட்டுப்படுத்த முடியும்.

மேலும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தான் சில சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக சொல்லப்படுகிறது. எனவே விசேட குழுக்களை அமைத்து திடீர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வழமையான செயற்பாட்டை பொலிஸார் மேற்கொள்வதன் மூலம் குற்றங்களை கட்டுப்படுத்தவே முடியாது.

அத்துடன் தற்போது எமது பிரதேசத்தில் இடம்பெறும் சிறு சிறு குற்றங்களை தடுப்பதற்கு இலகுவான நடவடிக்கை ஒன்றை பொலிஸார் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இணைந்து மேற்கொள்ளலாம். அதாவது கண்காணிப்பு கமராக்கள் பல இடங்களில் பொருத்தப்பட வேண்டும். அதன் ஊடாக குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கும். எனவே அந்த நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (ம-9)

# யாழ்.தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

## நிவர்த்தி செய்யக்கோரி அடையாள வேலை நிறுத்த போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி எதிர்வரும் வெள்ளிக்கிழமை 4 மணிநேர அடையாள வேலை நிறுத்தப்போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் மேலதிக நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்றும் அரச வைத்திய சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் வைத்தியர் த.காண்டிபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு உரிய முறையில் வைத்தியர்கள் நியமிக்கப்படவில்லை. அங்கு நீண்ட காலம் சேவையில் உள்ளவர்களுக்கும் உரிய காலப்பகுதிக்குள் இடமாற்றம் வழங்கப்படுவதில்லை.

இதனால் அங்கு வைத்தியர்கள் பற்றாக்குறை நீண்ட காலமாக நிலவி வருகின்றது. இது மோசமான நிலையாகும்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கும், அமைச்சுக்கும் அறிவித்தும் இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இருப்பினும் இது வரை நோயாளர்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாதவாறு அங்குள்ள சொற்ப வைத்தியர்களால் சேவை வழங்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் இறுதியாக எமது தாய்ச் சங்கத்தின் ஊடாக பொது சேவைகள் ஆணைக்குழுவிற்கும், மத்திய சுகாதார அமைச்சுக்கும் அறிவித்துள்ளோம். இதனால் சில நடவடிக்கைகள் தற்போது நடக்கின்றது.

குறிப்பாக தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு இடமாற்றத்தில் யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி வைத்திய சாலையில் இருந்து வர வேண்டியவர்களை வரவைப்பதாக அவ் வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இருப்பினும் அவ் வைத்திய சாலையில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறையை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரைக்கும் கால அவகாசம் கொடுத்துள்ளோம்.

அதற்கிடையில் வைத்தியர் தேவை நிறைவேற்றப்படாவிட்டால் போராட்டத்தினை நடத்த முடிவு செய்துள்ளோம். அப் போராட்டத்திற்கும் உரிய பலன் கிடைக்காவிட்டால் மேலதிக நடவடிக்கைளையும் செய்வதற்கு தீர்மானித்துள்ளோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)


## சைவ உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை

- ரீ மேக்கர்
- றொட்டி தயாரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர்
- சமையல் உதவியாளர்
- பார்சல் கட்டுபவர்
- தோசை தயாரிப்பாளர்

தொடர்புகளுக்கு:-
0766228879
(கி-3458)


## துயர் பகிர்கின்றோம்



அமரர் சண்முகம் மார்க்கண்டு

எமது பாடசாலையின் முதல்வர் திருமதி **மீனலோஜினி இதயசிவதாஸ்** அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் சண்முகம் மார்க்கண்டு அவர்கள் 04.08.2018 அன்று இறைபதம் அடைந்தார்.

அவரின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைவதோடு இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

**ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்**
**கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம், உருத்திரபுரம், கிளிநொச்சி**
(கி-3457)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் எஸ்.அன்ரனி சாள்ஸ் (குச்சா)



வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த **மெஸ்றூன் நிஷா** அவர்களின் அன்புத் தந்தை **அமரர் எஸ்.அன்ரனி சாள்ஸ்** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா ஆண்டவன் அடியில் சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

**வலம்புரிக் குடும்பம்**

# மன்னாரில் மீண்டும் புலிகளின் ஆட்சி!

## விமல் வீரவன்ச தகவல்

(கொழும்பு)

மன்னார் பிரதேசத்தில் முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவ்வித தடையுமின்றி செயற்படுவதால் மீண்டும் விடுதலைப்புலிகள் அப்பகுதியில் தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மன்னாரில் மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சி இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகின்றன.



மீண்டும் விடுதலைப்புலிகளின் ஆட்சி உருவாகி விட்டது. அவ்வாறாயின் தமிழ் மக்களுக்கான தீர்வு என்னவெனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மன்னார் பிரதேசத்தில் முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் தங்கள் விருப்பத்தின் படி செயற்படுகின்றனர். அவர்களை தடுக்க எந்த நடவடிக்கையும் இடம்பெறவில்லை எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## கைத்துப்பாக்கியுடன் முன்னாள் விமானி கைது

(கொழும்பு)

பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்பட்ட 6.35 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கியொன்றை தனது பயணப்பொதியில் மறைத்து டுபாய் நோக்கி செல்ல முற்பட்ட முன்னாள் விமானியொருவர் நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.



55 வயதுடைய சந்தேகநபர் ராஜகிரிய பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் துப்பாக்கியை இவ்வாறு மறைத்து கொண்டு சென்றது எதற்காக என்பது தொடர்பில் விமான நிலைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கண்காணிப்பின் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியில் இன்று இணையும் சைட்டம் மாணவர்குழு

(கொழும்பு)

மாலபேயிலுள்ள சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் குழுவொன்று, இன்று கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியின் மருத்துவப் பீடத்தில் இணைந்து கொள்ளவுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டில், சைட்டம் மருத்துவக் கல்லூரியில் இணைத்துக் கொள்ளப்பட்ட 14 மாணவர் குழுவைச் சேர்ந்த 40 மாணவர்களே, இவ்வாறு பாதுகாப்பு கல்லூரியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்த மாணவர்கள், சைட்டம் மருத்துவக் கல்லூரியில், சுமார் ஒரு வருடகாலக் கல்வியைப் பயின்றுள்ள போதிலும், கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியில் அவர்களை, முதலாமாண்டு மாணவர்களாகவே இணைத்துக்கொள்ள, அக்கல்லூரியின் மருத்துவப்பீட நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

அத்துடன், சைட்டம் கல்லூரியிலிருந்து கொத்தலாவலக்கு இணைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு, ஒருவர் ஒரு வருடகாலக் கல்வியை மேற்கொள்ள, தலா 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயைச் செலுத்த வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சிறிய வர்த்தகத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக 330 கடன் திட்டங்கள்

(கொழும்பு)

இளைஞர் தொழில் வாண்மையாளர்களை ஊக்குவிப்பதற்கான பிரதமர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்திப்பிரிவு, இளைஞர்களுக்காக முன்னெடுத்துள்ள இலங்கை வங்கிக் கடன் திட்டத்தில் இதுவரை 47 இளைஞர் யுவதிகளுக்கு 21 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கியின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கடனைப்பெற்ற இளைஞர், யுவதிகள் ஆடை தொழில் துறை, கட்டட நிர்மாணம், தொழில்நுட்பம், புகைப்படத்துறை உள்ளிட்டவற்றில் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய வர்த்தகத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக 330 கடன் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

வடக்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த பெருமளவானோர் இந்த கடனைப் பெற முன்வந்துள்ளனர். (இ-7)

## நண்டு வளத்தைப் பாதுகாக்க ஒத்துழையுங்கள்

(யாழ்ப்பாணம்)

கடல் வளத்தைப் பாதுகாக்கும் நோக்கோடும் எதிர்காலச் சந்ததியினருக்கு கடல் வளத்தைக் கையளிக்கும் நோக்கோடும் தற்பொழுது யாழ். மாவட்ட கடற்றொழில் பிரதேசங்களில் மீனவர்களால் பிடிக்கப்படும் (வெள்ளை நண்டு) நீலக்கால் நீந்தும் நண்டுகள் சந்தையில் கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாலும் இலங்கையின் சந்தை வாய்ப்பு அதிகரித்து காணப்படுகின்றமையாலும் சிறிய நண்டுகளை தொழிலாளர்கள் பிடிப்பதை தவிர்க்குமாறு 90 கிராமுக்கு கீழ் பிடிக்க வேண்டாமெனவும் கோருகின்றோம். யாழ். மாவட்டத்தில் 800 இற்கு மேற்பட்ட பெண்கள் நண்டுத் தொழிற்சாலை மூலம் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றார்கள்.

அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் நிலை ஏற்படும் என்பதாலும் தனியார் நிறுவனம் மீனவர்களிடம் கொள்முதல் செய்யும் சிறிய நண்டுகளை கொள்முதல் செய்யாது தவிர்க்க வேண்டும் எனவும் 90 கிராமிற்கு மேற்பட்ட நண்டினை கொள்முதல் செய்யுமாறு நண்டு வளம் அழியாது பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது. (இ)

## ஆளுநருக்கு எதிராக தொண்டராசிரியர்கள் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

நேர்முகப்பரீட்சைக்கு அழைத்தும் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என தொண்டராசிரியர்களாக கடமையாற்றிய நான்கு பேர் நேற்று திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த 2007ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரை பல தடவைகள் தொண்டராசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை இடம்பெற்ற போதிலும் 456 தொண்டராசிரியர்களின் பெயர்கள் வெளியாகியுள்ள நிலையில் தங்களுடைய பெயர்கள் உள்வாங்கப்படவில்லை எனவும் தங்களுக்கு நீதியை பெற்றுத்தருமாறும் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எச்.ஜீ.எம்.டபிள்யூ.ஜீ.திஸ்ஸநாயக்க மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்துபண்டா ஆகியோருக்கு எதிராக தொண்டராசிரியர் சார்பில் சட்டத்தரணி எஸ்.தில்லைராசாவினால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## அனைத்துத் தரப்பும் அச்சம் கொள்வதால் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய நியமிக்கப்பட வேண்டும்-கம்மன்பில

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சி தலைமையிலான ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ நியமிக்கப்பட வேண்டும் என ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக எவ்விதத்திலேனும் குற்றம் சாட்ட முடியுமா? என்பது தொடர்பில் பேராசிரியர் மக்ஸ்வெல் பரணகமவுடன் அமெரிக்கத் தூதரகக் குழு கலந்துரையாடியது உண்மை எனவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் அரச சார்பற்ற குழு ஒன்று அமெரிக்க தூதரகத்திற்கு சென்று கோத்தபாய ராஜபக்ஷவின் குடியுரிமை தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாகவும் கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அனைத்துத் தரப்பினரும் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு அச்சம் கொள்கின்றனர் என்றால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவரே ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் எனவும் கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வீடுகள் மீது தாக்குதல் வைத்தியசாலையில் வைத்து இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பத்தமேனி பகுதியில் சனசமூக நிலையம் மற்றும் வீடுகள் மீது தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் இருவர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 9.30 தொடக்கம் 10.30 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் அச்சுவேலி பத்தமேனி, பகுதியிலுள்ள சனசமூக நிலையம் மற்றும் அதனை அண்டியுள்ள வீடுகளின் வாசல் கதவுகள் என்பவற்றை மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள், கூரிய ஆயுதங்களால் சேதமாக்கிவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

இதில் வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளருடைய வீடும் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடங்களுக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் கையில் காயமடைந்த நிலையில் இருவர் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களை குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் என சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

## சட்டவிரோதமாக படகில் பயணித்த 21 பேர் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் வெளிநாடு ஒன்றுக்குச் செல்ல முயற்சித்த 21 பேர், கொழும்பு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

மீன்பிடிக்கு பயன்படுத்தப்படும் படகு ஒன்றின் மூலம் அவர்கள் பயணித்த போது, கொழும்பில் இருந்து 117 கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் தினேஷ் பண்டார இதனைத் தெரிவித்துள்ளார். கைதானவர்கள் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்களாவர். அவர்களில் 19 ஆண்களும், 3 பெண்களும் அடங்குகின்றனர்.

கைதான அனைவரும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. (இ-7)

## லிட்டன் தாஸ் காட்டடி

# ரி20 தொடரை வென்றது பங்களாதேஷ்

## ரஷலின் போராட்டம் வீணானது

லிட்டன் தாஸின் காட்டடி துடுப்பாட்டமும் முஸ்தபிசுர் ரஹ்மானின் பந்துவீச்சும் கைகொடுக்கபுளோரிடாவில் நடந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி ரி20 போட்டியில் 'டக்வொர்த் லீவிஸ்' முறைப்படி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி. 2-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி அசத்தியது.

அமெரிக்கா சென்ற மேற்கிந்தியத் தீவுகள். பங்களாதேஷ் அணிகள் அங்கு 3 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்றன.

முதலிரண்டு போட்டிகளின் நிறைவில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் இருந்த நிலையில். இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி லாடர்ஹில் நகரில் (புளோரிடா) நேற்று நடந்தது.

**லிட்டன் அரைச்சதம்**

நாணயச்சுழற்சியில் வென்றுமுதலில்துடுப்பெடுத்தாடிய 'பங்களாதேஷ் அணிக்கு லிட்டன் தாஸ் - தமிம் இக்பால் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது.

முதல் விக்கெட்டுக்காக இருவரும் இணைந்து 61 ஓட்டங்களை பகிர்ந்திருந்தபோது. தமிம் (21) ஆட்டமிழந்தார். சௌமியா சர்க்கார் (5). முஷ்பிகுர் ரஹிம் (12) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய லிட்டன் தாஸ் (61) அரைச்சதம் கடந்தார். அணித் தலைவர் சகிப் அல் ஹசன் (24). மகமதுல்லா (32*) ஓரளவு கைகொடுக்க.

20 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுக்களை. இழந்து 184 ஓட்டங்களை எடுத்தது.

**ரஸல் நம்பிக்கை**

185 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்டத்தில் இரு முறை மழை குறுக்கிட்டது.

இதையடுத்து. டக்வொர்த் லூயிஸ் விதிப்படி இலக்கு திருத்தப்பட்டு. 17.1 ஓவர்களில் 155 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு மேற்கிந்தியத் தீவுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டது.

தொடர்ந்து களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆன்ட்ரி பிளட்சர் (6), சாமுவேல்ஸ் (2) ஏமாற்றினர். சத்விக் வோல்டன் (19), ராவ்மன் பவெல் (23). தினேஷ் ராம்டின் (21) ஆறுதல் கொடுத்தனர். ஆன்டரி ரசல் (41) நம்பிக்கை அளித்தார். அணித் தலைவர் கார்லஸ் பிராத்வைட் (5) சோபிக்கவில்லை.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 17.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழையால் போட்டி தடைப்பட்டது.

இதனால் டக்வொர்த் லூயிஸ் விதிப்படி பங்களாதேஷ் அணி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகன். தொடர் நாயகன் விருதுகளை முறையே புங்களாதேஷின் லிட்டன் தாஸ். அணித் தலைவர் சகிப் ஆகியோர் வென்றனர்.



## தூக்கத்தில் நடந்தாரா சச்சின்?

### கங்குலி ருசிகரம்



"இரவு தூக்கத்தில் நடக்கும் சச்சினைப் பார்த்து பயந்துவிட்டதாக." முன்னாள் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி (வயது-46) தெரிவித்தார்.

சௌரவ் கங்குலி. சச்சின் டெண்டுல்கர் இருவரும் நெருங்கிய நண்பர்கள். 'காபி வித் சம்பியன்ஸ்' என்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற கங்குலி. சச்சினுடனான அனுபவங்கள் குறித்து கூறியதாவது.

ஒருமுறை டெஸ்ட் தொடருக்காக இங்கிலாந்து சென்றிருந்தோம். இருவரும் ஒரே அறையில் தங்கியிருந்தோம். இரவில் ஒருநாள் பார்த்தபோது சச்சின் நடந்து கொண்டிருந்தார். சரி பாத்ரூம் சென்றிருப்பார் என நினைத்துக் கொண்டேன். மறுநாளும் இதேபோல நடந்தார். இரவு 1.30 மணிக்கு இவர் ஏன் நடந்து கொண்டுள்ளார் என யோசித்தேன்.

மறுநாள்.' இரவில் நடந்து என்னை பயமுறுத்துகிறீர்களா?' என்றேன். அதற்கு அப்படியெல்லாம் இல்லை. எனக்கு தூக்கத்தில் நடக்கும் பழக்கம் உண்டு.' என்றார்.

மற்றொரு முறை எனக்கு 14 வயதிருக்கும். சச்சின். கம்ப்ளியுடன் இணைந்து இந்தூர் தேசிய முகாமில் பங்கேற்று கிரிக்கெட் பயிற்சியில் ஈடுபட்டோம். ஞாயிறு மதியம் நான் நன்றாகத் தூங்கி விட்டேன். மாலை 5.00 மணிக்கு விழித்த போது அறை முழுவதும் தண்ணீர் இருந்தது. எனது சூட்கேஸ் மிதந்து கொண்டிருந்தது.

ஒருவேளை பாத்ரூம் பைப் ஏதாவது உடைந்து தண்ணீர் வரும் போல என நினைத்து கதவை திறந்தேன். அங்கு சச்சின். கம்ப்ளி இருவரும் பக்கெட் நிறைய தண்ணீருடன் நின்று கொண்டிருந்தனர். ஏன் இப்படிச் செய்தீர்கள் என கேட்க. டென்னிஸ் பந்தில் கிரிக்கெட் விளையாடப் போகிறோம். கதவைத் தட்டினோம். நீ திறக்கவில்லை. அதனால்தான் இப்படிச் செய்தோம் என்றனர். இவ்வாறு கங்குலி கூறினார்.

பெண்கள் உலக கிண்ண ஹொக்கி தொடரில் நெதர்லாந்து அணி 8ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இறுதியில் 6-0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை வீழ்த்தியது.

லண்டனில். பெண்களுக்கான உலக கிண்ண ஹொக்கி தொடர் நடந்தது. இதன் இறுதியில் உலகின் 'நம்பர் 1' நெதர்லாந்து அணி. 16ஆவது இடத்தில் உள்ள அயர்லாந்தை எதிர்கொண்டது.

ஆரம்பத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்திய 'நடப்பு சம்பியன்' நெதர்லாந்து அணிக்கு 12ஆவது நிமிடத்தில் வெல்டன் முதல் கோலடித்தார்.

தொடர்ந்து அசத்திய நெதர்லாந்துக்கு கெல்லி ஜான்கர் (19வது நிமிடம்). வான் மேல் கிட்டி (28வது). பெனிக்ஸ் (30வது) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். முதல் பாதி முடிவில் நெதர்லாந்து அணி 4-0 என. முன்னிலை வகித்திருந்தது.

இரண்டாவது பாதியில் அபார ஆட்டத்தை தொடர்ந்து நெதர்லாந்து அணிக்கு மார்லஸ் கீடல்ஸ் (32வது நிமிடம்). வேன் மாசக்கர் கியா (34வது) தலா ஒரு கோலடித்தனர். கடைசி நிமிடம் வரை போராடிய அயர்லாந்து வீராங்கனைகளால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.


ஆட்டநேர முடிவில் நெதர்லாந்து அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றது.

**எட்டாவது முறை**

இதன்மூலம் நெதர்லாந்து அணி 8ஆவது முறையாக உலக கிண்ணத்தில் சாதித்தது. இதுவரை 13 முறை இறுதிகளில் விளையாடிய நெதர்லாந்து. 8 முறை (1974, 78, 83, 86, 90, 2006, 2014, 2018) சம்பியன் பட்டத்தை தன்வசப்படுத்தியது. நான்கு முறை (1981, 98, 2002, 2010) 2வது இடம் பிடித்தது.


தவிர அதிக முறை உலக கிண்ணம் வென்ற அணிகளுக்கான பட்டியலிலும் நெதர்லாந்து அணி முதலிடத்தில் நீடிக்கிறது. இதனைத் தொடர்ந்து ஆர்ஜென்ரீனா. அவுஸ்திரேலியா. ஜேர்மனி அணிகள் தலா 2 முறை கிண்ணம் வென்றுள்ளன.

முதன்முறையாக இறுதிக்கு முன்னேறிய அயர்லாந்து. 2ஆவது இடம்பிடித்து ஆறுதல் அடைந்தது.



## உலக ஹொக்கி

# நெதர்லாந்து சம்பியன்



## லோர்ட்ஸ் டெஸ்ட்

# பும்ரா சந்தேகம்!

இங்கிலாந்துக்கு எதிராக லோர்ட்சில் நடக்கவுள்ள 2ஆவது டெஸ்டில் இந்திய வேகப் பந்து வீச்சாளர் பும்ரா. காயம் காரணமாக பங்கேற்பது சந்தேகமாக உள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி. ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

பேர்மிங்காமில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட். நாளை மறுதினம் 9ஆம் திகதி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இதில் இந்திய வேகப்பந்துவீச்சாளர் பும்ரா விளையாடுவது சந்தேகமாக உள்ளது. முதல் மூன்று போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பும்ராவுக்கு. சமீபத்தில் அயர்லாந்துக்கு எதிரான முதல் 'ரி20' போட்டியின்போது கட்டை விரலில் காயம் ஏற்பட்டது. இதனால் இவர் முதல் டெஸ்டில் பங்கேற்கவில்லை.

இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு முன். பும்ராவின் காயம் முழுமையாக குணமடைய வாய்ப்பு இல்லை எனக் கூறப்படுகிறது. இதனால் லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டிக்கான 'லெவின்' அணியில் இவர் இடம்பிடிப்பது கேள்விக்குறியாகி உள்ளது.



கலாநிதி கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளையின் "தவம்" கவிதை நூல் வெளியீடும் அவரது 80 ஆவது அகவை நினைவேந்தலும் அண்மையில் நடைபெற்றது. யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் யாழ்.பஸ்தியன் சந்திக்கு அண்மையிலுள்ள பாதுகாவலன் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில் வரவேற்புரையை ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம், ஆசியுரையை புனிதவளன் கத்தோலிக்க அச்சகப் பணிப்பாளர் அருட்திரு எயின்ஸ்லி றொசான், வாழ்த்துரையை யாழ்.மாநகர ஆணையாளர் கவிஞர் த.ஜெயசீலன் ஆகியோர் வழங்க சிறப்புரையை திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோண்சன் ராஜ்குமார் நிகழ்த்தினார். நூலின் முதற்பிரதியை யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பெற்றுக் கொண்டார். மதிப்பீட்டுரையை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் வழங்கினார்.

# பொலிஸ் உத்தியோகத்தராக அறிமுகமாகி திருட்டில் ஈடுபட்ட பெண் விளக்கமறியலில்

(ஏறாவூர்)

ஏறாவூர் நகர கடைத் தெருவிலுள்ள நகைக்கடையொன்றுக்கு வந்த பெண்ணொருவர் தன்னை பெண் பொலிஸ் உத்தியோகத்தராக அறிமுகப்படுத்திக்கொண்டு நகைத் திருட்டில் ஈடுபட்டு தலைமறைவாகியிருந்தார்.



இந்நிலையில், சீ.சீ.ரி.வி. கமராவில் பதிவாகியிருந்த காட்சியை ஆதாரமாகக் கொண்டு துரிதமாகச் செயற்பட்ட ஏறாவூர் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி நிரோஷன் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் குறித்த சந்தேக நபரான பெண்ணை கடந்த சனிக்கிழமை மாத்தளை நகரில் வைத்து கைது செய்தனர்.

மாத்தளை நாவுல பிரதேசத்தைச் சேர்ந்த அலோசியஸ்மெலின்டேனியல்(வயது50) என்ற பெண்ணே இவ் வாறு கைது செய்யப்பட்டார்.

அப்பெண்ணிடம் மேற்கொண்ட தொடர் விசாரணைகளின் நிமித்தம் தான் ஏறாவூர் நகைக்கடையில் திருடிய நகையை கதுறுவெல நகரில் விற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அந்த விபரத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட பெண்ணுடன் மாத்தளையிலிருந்து கதுறுவெல நகருக்கு விரைந்த பொலிஸார் திருடப்பட்டு விற்கப்பட்ட குறித்த நகையைக் கைப்பற்றியதோடு அதனை வாங்கியவரையும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வாக்கு மூலத்தைப் பதிவு செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான பெண் மேலதிக நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஷ்வி முன்னிலையில் கடந்த சனிக்கிழமை ஆஜர் செய்யப்பட்ட போது அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் அன்றையதினம் சநதேக நபரை அடையாள அணிவகுப்பிற்குட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை, குறித்த பெண் நகைக்கடைக்குள் நுழைந்து தன்னை அறிமுகப்படுத்தியபோது தானும் தனது கணவரும் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவதாகக் கூறியதோடு தனக்கு நகை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இருப்பதாகவும் கூறியுள்ளார்.

பெண்ணின் வேண்டுகோளுக்கிணங்க தங்க நகைகள்" பார்வைக்கு காட்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது நகைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த பெண் தான் வங்கியிலிருந்து பணம் பெற வேண்டும் என்பதாகக் கூறி நகைக் கடையை விட்டு வெளியேறியுள்ளார்.

அதன் பின்னர் நகைக் கடை உரிமையாளர் நகைகளைச் சரிபார்த்தபோது ஒரு தங்கச் சங்கிலி காணாமல் போயிருந்தது.

சீ.சீ.ரி.வி. கமராவைப் பரிசோதித்தபோது தங்கள் நகைகளில் ஒன்றை அப் பெண் திருடி தனது கைப் பைக்குள் மறைத்துள்ள காட்சி சீ.சீரிவியில் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பனை அபிவிருத்திச் சபையின் 40 ஆவது ஆண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி சபையின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபை ஆரம்பித்து இன்றுடன் 40 ஆவது ஆண்டு பூர்த்தியாகிறது. இந்த நிறைவு நாளை முன்னிட்டு இன்று நண்பகல் நல்லூரில் கற்பகம், சிறப்பு அங்காடி திறப்புவிழா இடம் பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு நடைபெறும். இதில் பனை அபிவிருத்திச் சபையின் முன்னைநாள் தலைவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன், பனை உற்பத்திச் சங் கங்களுக்கான பதிவுச் சான்றி தழ்களும் வழங்கப்படவுள்ளன.

மேலும் பனை அபிவிருத்திச் சபையால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள்,இனி வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக சிறப்பு கலந்துரையாடலும் இடம்பெறும். (இ-9)




## இராசி பலன்

**மீனம்:** வெற்றிதரும் செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர்.

**இடபம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** உங்களிடம் யாராவது உதவி கேட்டு வரலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சுப செலவுகள் கூடும் நாள்.

**கடகம்:** வருமானம் பெருகி வளம் காணும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், அரசு வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மகரம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**இராசி பலன் – கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | இராசி பலன் கிரகநிலை | | சூரி, புத, ராகு |
| செவ், கேது | சந்திராஷ்டமம் அனுசம் இரவு 9.05 மணிக்கு மிதுன-சந்திரன் | | |
| சனி | | குரு | சுக் |

07.08.2018
ஆடி 22, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 1.58 மணிவரை
ரோகினி முற்பகல் 9.53 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
4 ஆம் ஆடிச்செவ்வாய்
ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்
வளவன்

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர்.

**விருச்சிகம்:** உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**கன்னி:** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், மனக்குறை அகன்று மன நிறைவு கூடும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

## இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சையால்

# யாழ்.போதனா வைத்தியசாலையின் தரம் மேலும் ஒரு படி உயர்ந்து நிற்கின்றது



கோப்புப் படம்: யாழ் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது திறந்த இருதய சத்திரசிகிச்சை - 20.12.2017

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஆண்டு மார்கழி மாதம் 20, 21 ஆம் திகதிகளில் திறந்த இருதய சத்திரசிகிச்சையானது முதற் தடவையாக இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சிதம்பரநாதன் முகுந்தன் தலைமையிலான சத்திர சிகிச்சைக் குழுவினரால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இது யாழ்.போதனா வைத்தியசாலையின் வளர்ச்சியில் ஏற்பட்ட ஒரு முக்கிய மைல் கல்லாகும் (Milestone). இதனால் இலங்கையில் திறந்த இருதய சத்திர சிகிச்சை நடைபெறும் 4 அரச வைத்தியசாலைகளில் ஒன்றாக யாழ்.போதனா வைத்தியசாலையும் தரம் உயர்ந்தது.

இதுவரை காலமும் இலங்கையில் திறந்த இருதய சத்திரசிகிச்சைகளை கொழும்பு தேசிய வைத்தியசாலை, கண்டி போதனா வைத்தியசாலை, காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளிலேயே நடைபெற்றன.

இவ்வைத்தியசாலைகள் குழாத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையும் இணைந்தது தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். யாழ்.போதனா வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்க உழைத்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

கடந்த 2017 மார்கழியில் இருதய நெஞ்சறை சத்திர சிகிச்சையை ஆரம்பிக்கும் போது இருதய முடியுரு நாடிகளில் ஏற்படும் அடைப்புக்களுக்கான சத்திர சிகிச்சை (Coronary Artery Bypass Graft Surgery (CABG)). இதய வால்வு மாற்று சத்திர சிகிச்சை (Valve Replacement Surgery). பிறப்பிலிருந்து இதயத்தில் ஏற்படுகின்ற அமைப்பு ரீதியான அசாதாரண மாற்றங்களுக்கான சீரமைப்பு சத்திர சிகிச்சை (Corrective Surgery for Congenital Cardiac Defect) முதலான சேவைகள் விரிவாக்கப்பட்டு சில ஆண்டுகளில் மிகச் சிறப்பான இருதய சத்திரசிகிச்சைகளை யாழ்.போதனா வைத்தியசாலையால் வழங்க முடியுமென எதிர்பார்க்கப்பட்டது.

### யாழ்ப்பாணத்தில் ஒரு மருத்துவ சாதனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கற்று மருத்துவராகி, மருத்துவத்தில் உயர் பட்டப்படிப்பினை நியூசிலாந்தில் பயின்ற இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சிதம்பரநாதன் முகுந்தன் (MBBS (Jaffna), MD- Surgery (Colombo), MRCS (England), MRCS Ed Consultant & Specialist in Cardiothoracic Surgery) இருதய வால்வில் கிருமித் தொற்று ஏற்பட்டதானால் தீவிர சிகிச்சைப் பிரிவில் 14 நாட்கள் செயற்கை சுவாசம் மூலம் உயிரூட்டப்பட்டுக் கொண்டிருந்த 41 வயதுடைய முருகையா தயானந்தன் என்பவருக்கு ஆபத்து நிறைந்த இருதய வால்வு மாற்று சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு மறுவாழ்வு கொடுத்துள்ளார்.

இதனை ஒரு மருத்துவ சாதனை என்றே குறிப்பிடலாம்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இதுவரை காலமும் இருதய முடியுரு நாடிகளில் ஏற்படும் அடைப்புக்களுக்கான சத்திர சிகிச்சை, பிறப்பிலிருந்து இதயத்தில் ஏற்படுகின்ற அமைப்பு ரீதியான அசாதாரண மாற்றங்களுக்கான சீரமைப்பு சத்திர சிகிச்சை முதலான திறந்த இருதய சத்திரசிகிச்சைகளே மேற்கொள்ளப்பட்டன.

எனினும் இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சிதம்பரநாதன் முகுந்தனால் இருதய வால்வு மாற்று சத்திர சிகிச்சையானது முதற் தடவையாக (Valve Replacement Surgery) 21.06.2018 அன்று முருகையா தயானந்தன் என்பவருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் உயர் கண்காணிப்பில் இருந்த தயானந்தனுக்கு இந்த சத்திரசிகிச்சையை இருதய சத்திரசிகிச்சை நிபுணர் முகுந்தன் மேற்கொண்டமையானது முன்னுதாரணப்படுத்தத்தக்க உன்னதமான மருத்துவப் பணியாகும்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டு வாராந்தம் இருவருக்கு மாத்திரமே திறந்த இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சிதம்பரநாதன் முகுந்தனும் அவருடன் இணைந்து உணர் வழியியல் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சுந்தரலிங்கம் பிறேமகிருஸ்ணா மற்றும் ஏனைய துறைசார் சத்திர சிகிச்சைக் குழாமும் இணைந்து 2018 ஜூலை 31 வரை 44 பேருக்கு திறந்த இருதய சத்திர சிகிச்சைகளை (Open Heart Surgery) வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர்.

இதைவிட 6 பேருக்கு இருதயம் நுரையீரலுடன் தொடர்புடைய ஆபத்தான சத்திர சிகிச்சைகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் யாழ்போதனா வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சைக்காக 750 பேர் வரையில் காத்திருக்கின்றார்கள்.

திறந்த இருதய சத்திர சிகிச்சைகளை தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கு ரூபா 10 இலட்சம் முதல் 13 இலட்சம் வரை தேவைப்படும்.

எனவே இலங்கையின் வடபகுதியில் மட்டுமன்றி கிழக்குப் பகுதியிலும் உள்ள ஏழ்மையான இருதய நோயாயாளிகளின் உயிர்காப்பதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவானது விரைந்து விரிவாக்கப்பட வேண்டும்.

ஏழை நோயாளிகளின் உயிர்காக்க தனியார் வைத்தியசாலைகளும் தங்கள் கட்டணத்தைக் குறைத்து இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

அருணாசலம் இராமச்சந்திரன்

# யாழில் இந்து இளைஞர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இந்து இளைஞர் மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 26.08.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இரண்டு அமர்வுகளாக இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் இம்மாநாடு இடம்பெறவுள்ளது. முதலாவது அமர்வு சிவயோகசுவாமிகள் அரங்காகவும் இரண்டாவது அமர்வு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்காகவும் இடம்பெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர் வண. மருதாசலம் அடிகளார், இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் முதல்வர்வண. அக்ஷராத்மாநந்த மகராஜ், யாழ். சின்மயா மிஷன் முதல்வர் வண. சிதாகாசானந்தா சுவாமிகள், கந்தர் மடம் வேதாந்த மடம் ஸ்ரீமத் வேதவித்தியாசாகர சுவாமிகள் ஆகியோர் மாநாட்டிற்கு முன்னிலை வகிக்க உள்ளனர்.

தமிழ்நாட்டின் பிரபல பேச்சாளர் இலக்கியச் சுடர் த.இராமலிங்கத்தின் தனியுரை "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற தலைப்பில் காலை அமர்வில் இடம்பெறவுள்ளது. மாலை அமர்வில் அவரது தலைமையில் சிறப்புப் பட்டிமண்டபம் இடம்பெறவுள்ளது.

மாநாட்டு நிகழ்ச்சிகளில் இளையோரது ஆற்றுகைகளே பெருமளவில் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச இந்து இளைஞர் பேரவை குப்பிளானைச் சேர்ந்த சிவபாதம் கணேஸ்குமாரால் உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும்.

கடந்த ஆண்டு மன்னாரில் இவர்களின் மாநாடு வெற்றிகரமாக இடம்பெற்றமையும் அதில் பிரபல பேச்சாளர் சுகி சிவம் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரபுக் கவிதைப் பயிலரங்கு நிறைவு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த மரபுக் கவிதைப் பயிலரங்கு (மூன்று மாதக் கற்கை நெறி) நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பயிலரங்கு இடம்பெற்றது.

மூத்த கவிஞர் சோ.பத்மநாதனும் கவிஞர் த.ஜெயசீலனும் பயிலரங்கின் வளவாளர்களாக செயற்பட்டனர். தமிழ்ச்சங்கத்தின் துணைச் செயலர் கு.றஜீபன் இணைப்பாளராகச் செயற்பட்டார். பயிலரங்கு இலவசமாக நடத்தப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

எதிர்வரும் 12.08.2018 ஞாயிற்றுக்கிழமை இவர்களுக்கான மதிப்பீடு இடம்பெறவுள்ளது.

பயிலரங்கில் பங்கேற்றவர்கள் படைத்த மரபுக் கவிதைகள் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தாரால் விரைவில் நூலுருவில் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)







வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய நுழைவாயில் திறப்பும் பாடசாலையில் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை திரைநீக்கமும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, உறுப்பினர்களான அ.பரஞ்சோதி, பா.கஜதீபன், ச.சுகிர்தன், வே.சிவயோகம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கிஷோர்)



கரவெட்டி அம்பன் வைத்தியசாலையில் இரண்டு மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு விழா அண்மையில் இடம்பெற்றது. அம்பன் வைத்தியசாலையில் நோயாளர் விடுதி அமைத்து தருமாறு கரவெட்டி ஒன்றியத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அரசினால் 27 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோஸ்குமார், கரவெட்டி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் மற்றும் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினர். (படங்கள்: மகாலிங்கம்)

# வாழ்வகத்தில் ஆங்கில தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகத்தில் அமைந்துள்ள "வாழ்வகம்" நடத்தும் ஆங்கில தினம் நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் வாழ்வக செல்லா மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கருணா சிவாஜி கலந்து கொள்வார். (இ)

# கோத்தாவின் ஊடகப் பேச்சாளராக மொட்டு சின்ன உறுப்பினர் நியமனம்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளராக கொழும்பு மாநகரசபை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் மிலிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.



இது தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2020 ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷவை முன்னிறுத்துவதாக கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Gotabaya Rajapaksa
@GotabayaR

Pleased to announce the appointment of Milinda Rajapaksha @milindarj as my official Media Spokesperson. He comes with qualifications in media & communications, deep experience in youth development and currently represents #SLPP in Colombo Municipal Council

9:52 AM - Aug 6, 2018

94 · 25 people are talking about this

## 75 மில்லியன் ரூபா மோசடி

# விமலுக்கு எதிரான வழக்கு நவம்பர் 2ல் விசாரணைக்கு

(கொழும்பு)

75 மில்லியன் ரூபாவுக்கும் மேல் பெறுமதியான சொத்துக்கள் மற்றும் பணத்தை தவறான வழியில் சம்பாதித்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை விசாரிக்க, கொழும்பு மேல் நீதிமன்றம் திகதியை அறிவித்துள்ளது.

இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுவாராச்சி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்குடன் சம்பந்தப்பட்ட கணனி சாட்சியங்கள் குற்றம் சுமத்தப்பட்ட தரப்பினரால் இதுவரை பரிசோதிக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

கணனி சாட்சியங்களை பரிசோதிக்க நேற்று வரை கால அவகாசத்தை வழங்கியிருந்த நீதிபதி. வழக்கு விசாரணைகளை நவம்பர் மாதம் 2 ஆம் திகதி நடத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அமைச்சராக கடமையாற்றிய வீரவன்ச, சட்டவிரோதமாக 75 மில்லியன் ரூபாவுக்கும் மேல் சம்பாதித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழு, அவருக்கு எதிராக இலஞ்ச சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 16 உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஐக்கிய தேசியக் கட்சி சூழ்ச்சி

### வாசுதேவ குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் 6 உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு அமைப்பாளர் பதவியும் 16 உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் வழங்கியுள்ளமை ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சூழ்ச்சி என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வு குறித்து அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்த கருத்துக்களை தான்



வரவேற்பதாகவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (இ-7)

# 30 மில்லியன் ரூபா கொள்ளை

## ஐவர் சிக்கினர்

புளத்சிங்கள பகுதியில் 30 மில்லியன் ரூபா பணத்தை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக புளத்சிங்கள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 16.59 மில்லியன் ரூபாவையும் 3 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களையும் மீட்டுள்ளதாகவும் தெரிவித்த புளத்சிங்கள பொலிஸார், இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பணிப்புறக்கணிப்பு

புத்தளம் மாவட்டத்திலுள்ள பொதுச் சுகாதாரப் பரி சோதகர்கள் நேற்றுத் திங் கட்கிழமை காலை முதல் பணிப்புறக்க ணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தலவில் ஆலயத்தின் உற்சவத்தின் போது தமக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்கக் கோரியே பணிப் புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர். (இ-7)


## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் புடைவை நிலையமொன்றுக்கு பழக விரும்பும் மற்றும் அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். நேரில் சமுகம் தரவும்.

லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-3456)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/8776 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 71 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA, CIMA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/048 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/8780 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 62 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/049 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 22<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/அரச தொழில்<br>தொ.இ: B/8781 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, SLAS/அரச தொழில்<br>தொ.இ: G/053 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/8782 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீடம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'5"<br>த்தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/062 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இவ்வாண்டில் சுகாதாரத்துறையை மேம்படுத்த பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டில் சுகாதாரத்துறையை மேம்படுத்தும் நோக்கில் 149.8 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதாரத் துறையை மேம்படுத்தும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் உட்கட்டுமான வசதிகள் தொடர்பான ஒன்பது வேலைத்திட்டங்களும் பொருட்கொள்வனவுக்கான ஒரு வேலைத்திட்டமும் 49.42 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்து இரண்டாம் கட்ட சுகாதாரத்துறை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் உட்கட்டுமான வசதிகள், பொருட்கள் கொள்வன்வு,பயிற்சிகள் என பல்வேறு வேலைத் திட்டங்களும் 45 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின் மூலம் பொருட்கள் கொள்வனவு, உட்கட்டுமான வசதிகள் போன்ற வேலைத்திட்டங்கள் 49.15 மில்லியன் ரூபா செலவில் முனனெடுக்கப்பட்டு வருகின்றன.

காரணிகளை அடிப்படையாகக் கொண்ட நிதியின் கீழ உட்கட்டுமான வசதிகளுக்காக 0.4 மில்லியன் ரூபாய் செலவிலும் மத்திய சுகாதார அமைச்சினது நிதியொதுக்கீட்டில் இரண்டு திட்டங்கள் 5.78 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு ஐந்து வரையான நிதியொதுக்கீடுகளின் மூலம் 149.8 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# வீட்டுத் திட்டத்தை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு சஜித் பிரேமதாசவுடன் கலந்துரையாடுவேன்

## முள்ளிக்குள மக்கள் சந்திப்பில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் தெரிவிப்பு



(மன்னார்)

மீள் குடியேறியுள்ள முள்ளிக்குளம் கிராம மக்களை மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நேரடியாக சென்று பார்வையிட்டார்.

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து மக்களின் போராட்டங்களின் பின் விடுவிக்கப்பட்ட முள்ளிக்குளம் மக்களின் காணிகளுக்கு சுமார் ஒரு வருடங்களின் பின் கடந்த மாதம் 18 ஆம் திகதி அந்த மக்கள் சென்று மீள்குடியேறியுள்ளனர்.

இந் நிலையில் அங்கு சென்ற மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள்.வடக்கு மாகாண அமைச்சர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் சென்று மக்களை பார்வையிட்டதோடு; அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

கடந்த 28 ஆம் திகதி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஸ் நேரடியாக சென்று பார்வையிட்டதோடு நிலமைகளை அவதானித்ததோடு முதற்கட்டமாக தறப்பாள்களையும் வழங்கி வைத்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் முள்ளிக்குளம் கிராமத்திற்குச் சென்று மக்களை பார்வையிட்டு முள்ளிக் குளம் பங்குத் தந்தை லோரன்ஸ் லியோவுடன் கலந்துரையாடினார். இதன்போது நானாட் டான் பிரதேச சபை உறுப்பினர்களான அ.றொஜன் மற்றும் ஜீவன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இதன்போது மக்களின் பிரச்சினைகளை கேட்டு அறிந்து கொண்ட பிரதி அமைச்சர் முதற்கட்டமாக அவசர பணிகளை தனது அமைச்சினூடாக முன்னெடுப்பதாகவும், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவுடன் கலந்துரையாடி வீட்டுத் திட்டங்களை கொண்டுவர நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார்.(2)

# மதுவையும் புகைத்தலையும் ஒழித்து வாழ்வதற்கான விழிப்புணர்வு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

மதுவையும் புகைத்தலையும் ஒழித்து நற்பிரஜையாக வாழ்வதற்கான விழிப்புணர்வு செயற்பாடு தொடர்பிலான நிகழ்வு கிராம உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் கிராமங்களில் நடைபெறவுள்ளது.

இதற்கமைவாக நாளை மறுதினம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை ஜே/209 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஈவினை, புன்னாலைக்கட்டுவன் பகுதி களுக்கு புன்னாலைக்கட்டுவன் தெற்கில் அமைந்துள்ள மத்தாீன ஓடை சனசமூக நிலையத்தில் பிற்பகல் 5 மணிக்கும் மறுநாள் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜே/190 கிராம உத்தி யோகத்தர் பிரிவிலுள்ள இணுவில் வடகிழக்கு பகுதிக்கு சபாபதிப்பிள்ளை வீதி காந்தரூபன் சனசமூக நிலையத்தில் பிற்பகல் 3 மணிக்கும் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜே/205 கிராம உத்தி யோகத்தர் பிரிவிலுள்ள ஏழாலை வடக்கு ஏழாலையில் அமைந்துள்ள R.D.S கட்டடத்தில் பிற்பகல் 4 மணிக்கும் எதிர் வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை ஜே/196 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சுன்னாகம் தெற்கு மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள கலைவாணி சனசமூக நிலையத்தில் பிற்பகல் 4 மணிக்கும் எதிர் வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை ஜே/194 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தாவடி வடக்கு தாவடி R.D.S. கட்டடத்தில் காலை 9 மணிக்கும் நடைபெறும். (2)

# வீதி அபிவிருத்தி திட்டங்களில் மிக மோசமான வீதிகளுக்கு முன்னுரிமை

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

வீதி அபிவிருத்தித் திட்டங்களை நகரில் முன்னெடுக்கும் போது மிக முக்கியமான தேவைப்பாடுகள் உள்ள வீதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் யோகேஸ்வரன் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். சாவகச்சேரி நகரசபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்ற வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளின் போது வட்டார உறுப்பினர்களிடையே வீதி அபிவிருத்தி தொடர்பாக நிலவிய கருத்து முரண்பாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களுக்கும் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டு மிக மோசமாக சேதமடைந்தும் அதேவேளை அதிக தேவைப்பாடு உள்ளதுமான வீதிகள் அபிவிருத்தியில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். வீதி அபிவிருத்தியின் போது வட்டாரத்திற்கு ஒரு வீதி என்பதனை விட தேவைப்பாடு அதிகம் உள்ள வீதிகளை செப்பனிடுவதே அவசியமானது. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் 186 வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன. சபை நிதியில் இவை எல்லாவற்றையும் அமைக்க முடியாது. ஆகவே பாடசாலை போன்ற அதிகம் பொது மக்கள் நடமாட்டம் கொண்ட வீதிகளுக்கு சகல உறுப்பினர்களும் முன்னுரிமை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். எமது சபையின் ஆளுகைக் காலத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள் அனைத்திற்கும் சிறந்த பெயர் சாவகச்சேரி நகரசபைக்கு மட்டுமே சென்றடையும். ஆகவே உறுப்பினர்கள் தமக்குள் முரண்படுவதில் பயனில்லை என சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் பாலமயூரன் தெரிவித்தார்.(2-30)

# காணி வழங்கப்படும் வரை எமது செயற்பாடு தொடரும்

## தமிழர் முற்போக்கு கூட்டணி

(கொழும்பு)

தோட்டங்களில் வாழ்கின்ற அனைத்து குடும்பங்களுக்கும், தனி வீட்டுக்கான காணிகள் பெற்றுக்கொடுக்கும் வரை, தமது செயற்பாடு தொடருமென, தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவித்துள்ளது.

மாத்தளைத் தோட்ட மக்களுக்கான "பசுமை பூமி" காணியுறுதி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே, கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார், தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்த 2015 ஆம் ஆண்டு வரை, பெருந்தோட்டத்தில் வாழ்கின்ற எந்தவொரு மக்களுக்கும், காணி உரித்து வழங்கப்படவில்லை என்றும் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கே காணிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டு தனி வீடுகள் அமைக்கப்பட்டிருந்த போதும், அவற்றுக்குக் காணி உறுதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

எனினும், இந்த நல்லாட்சி அரசாங்கத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வேண்டுகோளுக்கிணாங்க, அமைச்சரவை அனுமதி பெற்று, தோட்ட மக்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான காணியும் அதற்கான உறுதிப்பத்திரமும் வழங்கப்பட்டு வருகின்றது.

"பசுமை பூமி" காணி வழங்களின் ஆரம்ப கட்டமே, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், அதன் முதற்கட்டமாக, குறிப்பிட்ட சிலருக்குக் காணி உறுதி பெற்றுக் கொடுக்கப்பட்டு உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

எஞ்சியுள்ளவர்களுக்கு, மூன்று கட்டங்களாகக் காணி உறுதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் தோட்டங்களில் வாழ்கின்ற அனைத்து குடும்பங்களுக்கும் காணியைப் பெற்றுக் கொடுக்கும் வரை, தொடர்ச்சியாக இந்தச் செயற்பாட்டைத் தாம் முன்னெடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

# அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான கூட்டம்



(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாசேரி வரணி கிராம சேவையாளர் பிரிவில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஆண்டு தோறும் கிராமங்களில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திக்கென ஒதுக்கப்படுகின்ற ஒரு மில்லியன் ரூபா நிதியில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டம் தொடர்பான கூட்டம் கடந்த மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் மாசேரி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அப் பகுதி கிராம சேவையாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது ஐந்து அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்மொழியப்பட்டு மக்களின் கருத்துக்கள், விருப்பங்கள் கேட்டறியப்பட்டு ஒரு வேலைத் திட்டம் முதன்மைப்படுத்தப்பட்டது. நாவலடிப் பிள்ளையார் கோவில் தெற்கு வீதியை முழுமைப்படுத்துவதென மக்களால் ஏகமானதாக முடிவெடுக்கப்பட்டது. (2-103)






யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வங்கிக் கிளை முகாமையாளரின் ஏற்பாட்டில் இலங்கை வங்கியின் 79 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற நிகழ்வில், கடன் அறவீட்டு பிரிவின் மாவட்ட முகாமையாளர் எஸ்.அனந்தராஜா உரையாற்றுவதையும் சிறார்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு வீடுகளை வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும்

## அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம் அமைச்சர் றிசாத் வேண்டுகோள்



(மன்னார்)

நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகி நிற்கும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு வீடுகள் வழங்குவதில் தேசிய வீடமைப்பு அதிகார சபை விசேட கவனம் செலுத்த வேண்டும் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம் அமைச்சர் றிசாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் "2017கம் உதாவ செமட்ட செவன" வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மன்னார், நறு விலிக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள "லூர்து நகர்" வீடமைப்புத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் பிரதியமைச்சர் காதர் மஸ்தான், குழுக்களின் பிரதித்தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் றிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வடக்கு, கிழக்கில் நடைபெற்று முடிந்த கோர யுத்தத்தினால் இடம்பெயர்ந்து உள்நாட்டிலும், இந்தியாவிலும் வாழ்ந்த மக்கள் இப்போது தாம் வாழ்ந்த பிரதேசத்தில் மீண்டும் வந்து, வீடுகள் இல்லாததனால் கொட்டில்களை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, இந்தப் பிரதேசத்தில் வீடில்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அவர்கள் முன்னர் வாழ்ந்த வீடுகள் முற்றாகத் தகர்ந்தும், அழிந்தும் போனதால் இந்த மக்களின் வீடில்லாப் பிரச்சினையை வித்தியாசமான பிரச்சினையாக அணுகி இதனைத் தீர்த்து வைக்க வேண்டும்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் முயற்சியினால், வீடுகள் அற்றவர்களை வீடுகள் உள்ளவர்களாக மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில், வடக்கிலும் மாதிரிக் கிராமங்கள்



அமைக்கப்பட்டு வருகின்றன. இற்றைவரை 34 மாதிரிக் கிராமங்களை அவரது அமைச்சு அமைத்து வழங்கியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் காணிகள் இருந்தால் 100 மாதிரிக் கிராமங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமென அமைச்சர் அரச அதிபரிடமும், எம்மிடமும் தெரிவித்தார்.

நீண்டகாலமாக எமது மக்களுக்கு இருந்துவரும் இந்த வீடில்லாப் பிரச்சினை, அவரின் வருகையின் பின்னராவது தீரும் என எதிர்பார்க்கின்றேன். (2)

# அமைச்சர் மட்டத்தில் நடைபெறும் சந்திப்பில் கலந்துகொள்ளப்போவதில்லை

## முல்லை. மீனவர்கள் உறுதி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக நாளை 8 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அமைச்சர் மட்டத்தில் நடைபெறும் சந்திப்பில் மீனவர்கள் சங்க பிரதிநிதிகள் சார்பில் எவரும் கலந்து கொள்ளப் போவதில்லை என, முல்லைத்தீவு மீனவர்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேறகொள்ளப்பட்டு வரும் தடை செய்யப்பட்ட மற்றும் அனுமதியற்ற கடற்றொழில்களால் தமது வாழ்வாதாரத்தொழில் முழுமையாகப் பாதிக்கப்படுவதாக தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கடந்த 2ஆம் திகதி கவனயீர்ப்பு போராட்டம்ஒன்றை முன்னெடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று 5ஆவது நாளாகவும் தொடர்ந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தையடுத்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்தின் பணிப்பாளர் இனிகே ஜனக பிரசன்ன குமாரவினால் நாளை 8 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கடற்றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோரின் பங்குபற்றுதலுடன் அமைச்சில் நடை பெறும் சந்திப்பில் கலந்து கொள்ளும் பொருட்டு முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் சார்பில் மீனவர்கள் சங்கப்பிரதிநிதிகள் 10 பேரைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு எதிர்வரும் 12 ஆம் திகதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேரடியாக வருகை தருவதாக தெரிவித்துள்ள நிலையில் அன்றையதினம் தங்களின் நிலைப்பாடுகள் தொடர்பில் எடுத்துக்கூறுவதாகவும் தெரிவித்துள்ள மீனவர்கள் சம்மேளனத்தின் பிரதிநிதி, மீனவர்கள் சங்கப்பிரதிநிதிகள் நாளை 8ஆம்திகதி நடைபெறும் கூட்டத்தில் தமது பிரதி நிதிகள் சார்பில் 10 பேரை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதில் தங்களில் யாரும் கலந்துகொள்ளப்போவதில்லைஎன்று தெரிவித்துள்ளனர். (2-315)




# பாரம்பரிய மூலிகை உற்பத்தி தோட்டத்தை வீட்டுக்கு வீடு விஸ்தரிப்பு செய்ய வேண்டும்

## அமைச்சர் றிசாத் பதியுதீன் வேண்டுகோள்

(மன்னார்)





பாரம்பரிய மூலிகை உற்பத்தித் தோட்டம் இலங்கையில் வெற்றி பெற்றால் ஆண்டு தோறும் மூலிகையின் இறக்குமதிக்காக செலவிடப்படும் சுமார் 800 அல்லது 900 மில்லியன் ரூபாவை மிகுதிப்படுத்தி நமது உள்ளூர் மக்களின் திட்டத்துக்கு அதனைப் பயன்படுத்த முடியும் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் 2017 ஆம் "உதாவ செமட்ட செவன" வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மன்னார் நறுவிலிக் குளத்தில் அமைக்கப்பட்டுள்ள லூர்து நகர் வீடமைப்புத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டதன் பின்னர் மன்னார் மாவட்டத்தில் பாரம்பரிய மூலிகை உற்பத்தித் தோட்டம் ஒன்றை அங்குரார்ப்பணம்செய்து வைத்த போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

இந்த அரிய திட்டத்தை வீட்டுக்கு வீடு விஸ்தரிப்புச் செய்ய பிரதேச செயலாளர்களும், கிராம சேவையாளர்களும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

இலங்கையில் இது வெற்றி பெற்றால் ஆண்டு தோறும் மூலிகையின் இறக்குமதிக்காக செலவிடப்படும் சுமார் 800 அல்லது 900மில்லியன் ரூபாய்களை மிச்சப்படுத்தி, நமது உள்ளூர் மக்களின் திட்டத்துக்கு அதனை பயன்படுத்தலாம்.

அத்துடன், மன்னார் பள்ளிமுனையில் அவரது தந்தை பிரேமதாச அமைத்துக் கொடுத்த வீடுகள் தற்போது உடைந்த நிலையில் காணப்படுகின்றன. எனவே, இவற்றைத் தகர்த்துவிட்டு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன் என அமைச்சர் தெரிவித்தார். (2)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடித் தொழில்களுக்கு எவருக்கும் அனுமதி கொடுக்க வேண்டாம்

## சிவமோகன் எம்.பி. வலியுறுத்து

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் கொண்டுவரப்படும் வீட்டுத்திட்டங்களுக்கு தடையாக இருப்பது வனவளப் பிரிவு என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முல்லைத்தீவு செல்வபுரம் மாதிரி கிராம திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத்திட்டங்கள் ஆரம்பத்தில் வெலிஓயா பிரதேசத்தில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. பின்னர் ஒரு அமைச்சர் சஜித் பிரேமதாசவினால் பாராளுமன்ற பொதுக் கூட்ட அறையில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. அங்குதான் எமது பிரதேசங்களிலும் வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தோம். அதனை கருத்தில் எடுத்துக் கொண்டு இன்று பெருந்தொகையான கிராமங்களை அபிவிருத்தி செய்து வருகின்றார்கள்.

பிலவுக்குடியிருப்பிலிருந்த மக்களுக்கு அரச திணைக்களம் வீட்டுத்திட்டத்தை வழங்கமுடியாது என்று மறுத்திருந்தது. தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஊடாக நாங்கள் வழங்கி இருந்தோம்.

பல்வேறு வீட்டுத்திட்டங்கள் இங்கு இருக்கின்றன. அது மக்களுக்கு தெரியாது.

நான் ஒரு கோரிக்கையை பகிரங்கமாக முன்வைக்கின்றேன். கட்சி பேதம் இன்றி பிரதேச சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்கள் வட்டாரங்களில் இரண்டு வீட்டுத்திட்டங்களையும் அதற்கான ஆட்களையும் காணிகளையும் நீங்களே தெரிவு செய்து அடையாளம் காட்டி தருவீர்களானால் ஒவ்வொரு பிரதேச சபை உறுப்பினர்களும் ஆகக்கூடியது ஐந்து வீட்டுத் திட்டத்தினையாவது அடையாளப்படுத்தினீர்கள் என்றால் மாவட்ட அபிவிருத் திக் குழுக்கூட்டத்தில் அதனை சிபார்சு செய்து தருவேன் என்றும் தெரிவித்த அவர்,

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையூடாக வரும் வீட்டுத்திட்டங்களுக்கு தடையாக இருப்பது வனவளப் பிரிவு மட்டுமே. அவர்கள் எல்லை போட்டிருக்கும் நிலங்கள் எல்லாம் காடுகள் என்று சொல்கின்றார்கள்.

மாங்குளத்தில் மாவீரர் கிராமம் என்று ஒரு வீட்டுத் திட்டம் ஆரம்பித்தோம். அங்கு அவர்கள் மரங்களை வெட்ட வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் மரங்களின் கீழ் வீடுகளை கட்டி வருகின்றோம். எங்களால்எதுசெய்யமுடியுமோஅந்த விதத்தில் அந்த அபிவிருத்திகளை செய்யவேண்டும்.

எமது மக்கள் வீதியில் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். எமது கடல் வளம் ஒட்டுமொத்தமாக சுறண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. சுருக்கு வலை என்ற போர்வையில் கடல் வளம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மக்களின் கோரிக்கை தடைசெய்யப்பட்ட அட்டை பிடிப்பு தொழில், சுருக்குவலை தொழில் போன்ற தடை செய்யப்பட்ட அனைத்து தொழில்களையும் இடைநிறுத்துங்கள். சட்டத்திற்கு அவற்றில் இடம் உண்டு.

2009 ஆம் ஆண்டிற்கு முன்சட்டவிரோதமான தொழில்களை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொண்டதல்ல. அதனால்தான் முல்லைத்தீவில் வளங்கள் நிலைகொண்டுள்ளன.

ஒருபுறத்தால் இந்திய ரோலர்களில் வந்து திருடிச் சென்றார்கள். இப்போது தென் பகுதியில் இருந்து வந்து திருடுகின்றார்கள்.

எமது வளம் எமது மக்களின் வாழ்வாதாரத்திற்காக இருக்கவேண்டும் என்பது தான் மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. எனவே அமைச்சர், அமைச்சரவையில் மீன்பிடி அமைச்சருக்கு இதனை நேரடியாக தெரியப்படுத்தி எமது பிரதேசத்தில் இந்த தொழில்களுக்கு யாருக்கும் அனுமதி கொடுக்க வேண்டாம் என்றும் கொடுக்கப்பட்ட சகல அனுமதிகளையும் இரத்து செய்யவேண்டும் என்று அவர்தெரிவித்துள்ளார். (2-281)

# இயக்கச்சி-விநாயகர் வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைப்பு

(கண்டாவளை)

நீண்ட நாட்களாக புனரமைப்புக்கள் எதுவும் இன்றி மக்கள் பாவனைக்கு ஒவ்வாத வகையில் மணல் வீதியாகக் காட்சியளித்த இயக்கச்சி விநாயகபுரம் வீதி பலரது வேண்டுகோளை அடுத்து தற்போது கொங்கிறீட் வீதியாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையிலிருந்து 4.5 மில்லியன் ரூபாவும் புனரமைக்கப்பட்டு வரும் இவ் வீதியின் வேலைகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினுடைய தவிசாளர் சு.சுரேனுடன் இணைந்து பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் , உள்ளுராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன் ஆகியோர் நேரடியாகவே சென்று பார்வையிட்டனர்.

இங்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கஜன், உறுப்பினர்களான அருட்செல்வி, த.றமேஸ், கி.வீரவாகுதேவர் ஆகியோருடன் கிராம மட்ட அமைப்பினரும் உடனிருந்தனர். (2-315)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச் சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை கல்வியங்காட்டில் இடம்பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி ஒற்றை திருக்கை மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. கொடியேற்றத்துக்கான கொடிச்சீலையானது சிவஞான முதலியார் பரம்பரையில் கந்தையா தர்மகுலசிங்கம் என்பவரின் இல்லத்துக்குச் சென்று ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியர் கையளித்தார். ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

## “ஆட்சி மாற்றமல்ல கொள்கை மாற்றமே அவசியம்”

# தமிழர்களிடமிருந்தும் முஸ்லிம்களிடமிருந்தும் நாட்டைப் பாதுகாக்க சிலர் நினைப்பது தவறு

## ஜே.வி.பி.செயலர் ரில்வின் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர்களோ அல்லது முஸ்லிம்களோ, நாட்டு வளங்களை தனியர்ருக்கோ அல்லது வெளிநாடுகளை சேர்ந்தவர்களுக்கோ விற்பனை செய்ததில்லை என குறிப்பிட்டுள்ள ஜே.வி.பி, ஆகவே தமிழர்களிடமிருந் தும் முஸ்லிம்களிடமிருந்தும் நாட்டை பாதுகாக்க வேண்டுமென, சிலர் நினைப்பது தவறானதெனச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆட்சியை மாற்றுவதாலோ அல்லது ஆட்சியாளர்களை மாற்றுவதாலோ நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல முடியாது என்றும் கொள்கை மாற்றமே நாட்டுக்கு தற்போது அவசியமானது எனவும் தெரிவித்துள்ளது.

கம்பஹாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனாலும், அவரது அமைப்பாலும், கடந்த காலங்களில் நாட்டில் பிரச்சினைகள் காணப்பட்டன. எனினும், தற்போது அந்த பிரச்சினைகள் இல்லை" எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், "பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கே, நாட்டு வளங்களை விற்பனை செய்ய வேண்டியிருப்பதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்கும் தனியாருக்கும் விற்பனை செய்துவரும் அரசாங்கத்திடமிருந்தே நாட்டைப் பாதுகாக்க வேண்டும்" என்றார்.

"வெளிநாடுகளிடமிருந்து அதிகப்படியான கடன்களை பெற்றுள்ளதால், அரசாங்கம் நாட்டு மக்களிடமும் அதிகப்படியான வரியை விதித்துள்ளது. இவ்வாறான பிரச்சினைகளை சரிசெய்வதற்கு, நாட்டுக்கு கொள்கை மாற்றம் அவசியம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீராடச் சென்ற இளைஞர்கள் சடலமாக மீட்பு



(கொழும்பு)

திஸ்ஸமஹாராம, கிரிந்த கடற்பகுதியில் நீராட சென்று நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த இருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கோஸ்காட் கடற்படை முகாமிற்கு அருகிலுள்ள கடற்கரைப்பகுதியில் குறித்த இருவரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஊருபொக்க பகுதியை சேர்ந்த 20 மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் இருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 4ஆம் திகதி குடும்பத்தினருடன் கடலில் நீராட சென்ற போதே குறித்த இருவரும் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# நியமனம்பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு முன்சேவைப் பயிற்சி நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு 05.08.2018 இல் புதிதாக ஆசிரிய சேவை நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான முன் சேவைப் பயிற்சி நாளை 08.08.2018 முதல் 28.08.2018 வரையான 21 நாட்கள் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி, வட்டுக்கோட்டையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே குறித்த ஆசிரியர்கள் இப் பயிற்சி நெறியில் பங்கு கொண்டு தமது சேவை நிரந்தமாக்கப்படுதலுக்கு தேவையான அடிப்படைத் தகுதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் முன்னைய ஆண்டுகளில் ஆசிரிய நியமனம் பெற்று இதுவரையில் இம் முன் சேவைப் பயிற்சி நெறியில் பங்கு பற்றி முன்சேவைப் பயிற்சியினை நிறைவு செய்யாத ஆசிரியர்களும் இப் பயிற்சி நெறியில் பங்கு கொண்டு தமது சேவை நிரந்தரமாக்கப்படுதலுக்கு தேவையான அடிப்படைத் தகுதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ-7)



கைதடி கிழக்கு நவபுரம் ஸ்ரீதுர்க்கை அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமானது.



வதிரி சந்திரோதயத்தில் சிவகாமி பவுண்டேஷன் நிறுவனத்தினரால் "சாதனையாளர் கௌரவிப்பும் விருது வழங்கலும்" தமிழ் மன்றத் தலைவர் சி.பத்மராஜன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கனடாவிலிருந்து வருகை தந்த பாக்கியநாதன் தம்பதியினர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)


# கல்விக்கான வேலைத்திட்டங்களில் மூன்றில் ஒரு பங்கு தமிழர்களுக்கு

## இராஜாங்க அமைச்சர் இராதா வலியுறுத்து

(ஹற்றன்)

நாட்டில் கல்விக்கான வேலைத் திட்டங்களில் மூன்றில் ஒரு பங்கு தமிழர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

ஹற்றனில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாராட்டு விழாவில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.



"நாட்டில் காணப்படும் 10 ஆயிரத்து 142 பாடசாலைகளில் மூவாயிரம் பாடசாலைகள் தமிழ் பாடசாலைகளாகும். இதனால் கல்விக்கு வழங்கப்படும் சலுகைகளில் நூற்றுக்கு 30 சதவீதமாவது தமிழுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற விடயத்தில் அக்கறையுடன் செயற்படுகிறேன்.

இந்தவகையில் நான், மத்திய மாகாண கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் 3021 ஆசிரியர்களுக்கு நியமனங்களை பெற்றுக்கொடுத்துள்ளேன்.

அத்துடன் மலையகத்தில் பல போட்டிகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் பாடசாலை கட்டடங்கள்.கல்வி அதிகாரிகள் என பல உரிமைகளை பெற்றுக்கொள்ள இ.தொ.கா பெரும் சக்தியாக அமைந்திருந்தது.

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் அவரது செயலாளர் ஊடாக மலையகத்தின் கல்விக்காக பல உரிமைகள் பெறப்பட்டது" எனவும் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (இ-7)

# உண்ட மயக்கம் உங்களுக்கும் உண்டா?




பெரும்பாலானவர்களுக்கு மதியம் சாப்பிட்டு முடித்ததும் சோர்வாக இருக்கும் கண்களைச் சுழற்றிக்கொண்டு தூக்கம் வரும். பணியிடங்களில் குட்டித் தூக்கம் போடுவதும் சாத்தியமில்லை. இந்த மந்தத்தைத் தவிர்த்து புத்துணர்ச்சியுடன் இருக்க உதவும் சில குறிப்புக்கள்.

### போதுமான அளவு தூக்கம் அவசியம்

01

இரவில் போதுமான, ஆழ்ந்த தூக்கம் இல்லையென்றால், அது பகல் நேரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். இரவு நேரத் தூக்கத்தை முறைப்படுத்தினால், பகல் நேரத்தை உற்சாகமாகக் கடக்கலாம்.

### காலை உணவு முக்கியம்

02

ஒரு நாளின் மிக முக்கியமான உணவு, காலை உணவு. குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பும், வேலைக்குக் கிளம்பும் பரபரப்பான காலை நேரத்தில் காலை உணவை முறையாக உட்கொள்வது கொஞ்சம் கடினமானதுதான். காலை உணவு, தேவையான சக்தியை உடலுக்குக் கொடுக்கும். உடல் சீராக இயங்கவும் இரத்தத்தில் சர்க்கரை அளவைச் சீராக வைத்திருக்கவும் உதவும். சத்தான காலை உணவு, மதிய உணவின் அளவைக் குறைக்கும் மந்த நிலையையும் தவிர்க்க உதவும்.

### மதிய உணவில் கவனம்

03

மதியத்துக்குப் பிறகான புத்துணர்வை மதிய உணவுதான் தீர்மானிக்கிறது. அதிகமாகச் சாப்பிடுவது, கொழுப்பு நிறைந்த துரித உணவுகளைச் சாப்பிடுவது, இனிப்புகள், பதப்படுத்தப்பட்டவை போன்ற உணவுகளைச் சாப்பிட்டால் மதிய நேரத்தில் தூங்கிவழிய நேரும். இந்த உணவுகள் ருசியாகவும், நமக்குப் பிடித்ததாகவும் இருந்தாலும் உடலுக்குக் கிடைக்கும் ஊட்டச்சத்து அளவைக் குறைத்துவிடும். கார்போவைதரேற்று குறைவாகவும், புரதம் அதிகமாகவும் உள்ள உணவுகளைச் சாப்பிடுவதே இதற்குத் தீர்வு.

### கஃபைன் தவிர்க்கவும்

04

கஃபைன் புத்துணர்ச்சியைக் கொடுக்கும் என்று கூறப்பட்டாலும், மதிய உணவுக்குப் பின் ஏற்படும் சோர்வைப் போக்க உதவாது. மதிய உணவுக்குப் பிறகு கோபி, தேநீர், சோடா போன்றவற்றுக்குப் பதிலாகத் தண்ணீர் குடிப்பதே நல்லது.

### ஆரோக்கியமான நொறுக்குத்தீனிகள்

05

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு, சிலருக்கு இனிப்பு சாப்பிடும் பழக்கம் இருக்கும். அந்த ஆவலை அடக்கிக் கொள்வதுதான் நல்லது. அதற்குப் பதிலாக, அப்பிள் போன்ற ஆரோக்கியமான பழங்களை உட்கொள்ளலாம். இது இனிப்பு சாப்பிட்ட திருப்தியைத் தரும் மந்த நிலையை மாற்றும்.

இப்படி எமது உணவில் அதிக அக்கறை கொண்டோமாக இருந்தால் நாமும் நீண்ட காலம் நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வாழலாம் என்பது உண்மை.

அதைவிடுத்து பசிக்காக உண்மையான வயிறு நிறைய உண்டு அலுவலகங்களில் தூங்கி வீழ்வது தவிர்ப்போம் ஆரோக்கியமாக வாழ்வோம்.

# ஜனநாயகத்திற்கு விரோதமாக நல்லாட்சி செயற்படுகின்றது

## மகிந்த அணி மீண்டும் சாடல்

(கொழும்பு)

ஜனநாயக்கத்திற்கு எதிரான செயற்பாடுகளை நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குற்றம் சுமத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் நிறைவில் தமிழ் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ராஜ் பாஸ்கரன் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நாடாளுமன்றத்தில் எவ்வாறு எமக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியினை வழங்க மறுப்பு தெரிவிக்கின்றார்களோ அதே போன்றதொரு செயற்பாடுதான் கொழும்பு மாநகர சபையிலும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைச்சர் மனோ கணேசனின் கட்சியும் துணை போகின்றது. அவருடைய கட்சியினர் ஆளும் கட்சிக்கும் ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கின்றனர். அதேபோன்று எதிர்க்கட்சிக்கும் ஆதரவு வழங்குகின்றனர்' என குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)





# போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கிரிபத்கொட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, 21 டெஸ்லா எனப்படும் போதைப் பொருள் மாத்திரைகள் மற்றும் ஒரு தொகை போதைப் பொருளுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட அவர், ஹுனுப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர் எனவும் போதைப்பொருள் வில்லைகளுக்கும் மேலதிகமாக அவரிடமிருந்து ஹெரோயின் மற்றும் ஹஷீஸ் போதைப் பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)



# மு.கா. தலைவராக ஹக்கீம் அங்கீகாரம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 28 ஆவது பேராளர் மாநாடு, கண்டி, பொல்கொல்ல மகிந்த ராஜபக்ஷ உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது, கட்சியின் தலைவராக, அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கீகரிக்கப்பட்டார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாத்தில், கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற அதியுயர் பீடக் கூட்டத்தில், கட்சித் தலைவராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட அமைச்சர் ஹக்கீமின் தெரிவை அங்கீகரிக்குமுகமாக, பேராளர்கள் ஒருமித்த குரலில் தக்பீர் முழங்கினர்.

பேராளர்களின் அங்கீகாரத்தை ஏற்றுக்கொண்ட அமைச்சர் ஹக்கீம், அக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கட்சியின் பதவிநிலை அலுவலர்களைப் பிரகடனம் செய்தார். அதில், கட்சியின் தவிசாளராக ஏ.எல். அப்துல் மஜீத், செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், பொருளாளராக எம்.எஸ்.எம்.அஸ்லம் ஆகியோரும், மேலும் ஏனைய பதவிநிலை அலுவலர்களும் அறிவிக்கப்பட, பேராளர்கள் அவ்விபரத்தை அங்கீகரித்தனர். (இ-7)

# சோசலிச சமத்துவக் கட்சியின் கூட்டமும் விரிவுரைகளும் யாழில்

(யாழ்ப்பாணம்)

சோசலிச சமத்துவக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 50 ஆவது ஆண்டு நிறைவினை யொட்டி சட்டமும் விரிவுரைகளும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதலாவது கூட்டம் இன்று 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் "ட்ரொஸ்கிசத்துக்கான கொள்கை பிடிப்பான போராட்டத்தின் அரை நூற்றாண்டு" எனும் தலைப்பில் இடம்பெறும்.

தொடர்ந்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி மாலை 4 மணியளவில் "புரட்சிக் கம்யூனிஸ் கழகத்தின் ஸ்தாபிதம்" ஒக்டோபர் 11 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் இனவாதத்திற்கும் "பிரிவினை வாதத்திற்கும் எதிரான அனைத்துலக சோசலிசத்துக்கான போராட்டம்" ஒக்டோபர் 31 ஆம் திகதி மாலை 4 மணியளவில் "முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு எதிராக சோசலிசக் குடியரசுக்கான போராட்டம்", நவம்பர் 15 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் "குட்டி முதலாளித் துவ தேசியவாதத்துக்கு எதிராக சர்வதேச சோசலிசத்துக்கான போராட்டம்" ஆகிய தலைப்புக்களில் விரிவுரைகள் நடைபெறவுள்ளன. (இ)

# மாமாவின் கத்திக்குத்தில் மருமகள் பலி!

(கொழும்பு)

மருமகளை மாமனார் கத்தியால் குத்திக்கொன்ற சம்பவமொன்று, பசறையில் இடம்பெற்றுள்ளது. பசறை, மீரியபெத்த வெலிபிம்பே எனுமிடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில், திலுகாதமயந்தி (வயது-40) என்பவரே பலியாகியுள்ளார்.

திலுகா தமயந்தியின் கணவன், சில வருடங்களுக்கு முன்னர், உயிரிழந்துள்ளார்.

அதன்பின்னர் மேற்படி பெண், மாமி மற்றும் மாமாவுடன், அவர்களின் வீட்டிலேயே தங்கியிருந்துள்ளார். இந்நிலையில், மாமிக்கும் மருமகளுக்குமிடையில் அடிக்கடி சண்டை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில், பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்போதெல்லாம், இவ்விருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து, பொலிஸார் சமாதானப்படுத்தி அனுப்பிவைத்துள்ளனர்.

எனினும், சண்டையின் போது, மாமியை பிடித்திழுத்த மருமகள், வீட்டின் கதவு நிலையில், மாமியை மோதித் தாக்கியுள்ளார். இதனால், மாமியின் நெஞ்சுப் பகுதியில் கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளன. அதனையடுத்து வைத்தியசாலையில் மாமி அனுமதிக்கப்பட்டாரென, பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்பின்னரே, மாமாவுக்கும் மருமகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அந்த வாய்த்தர்க்கம் முற்றிய நிலையிலேயே, வீட்டிலிருந்த கத்தியை எடுத்து, மருமகளின் கழுத்தில் குத்தி மாமனார் படுகொலை செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில், சந்தேகநபரான 65 வயதான நபர் கைதுசெய்யப்பட்டுள்ளாரென தெரிவித்த பொலிஸார், சம்பவம்தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர். (இ-7)

பாரதம்

# கருணாநிதி உடல்நலம் குறித்து நேரில் கேட்டறிந்தார் ஜனாதிபதி



(சென்னை)

தி.மு.க தலைவர் கருணாநிதியை, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந் நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவரின் உடல் நலம் குறித்தும் விசாரித்துள்ளார்.

கருணாநிதியை சந்திப்பதற்காக தனி விமானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்னைக்கு வருகைதந்த ராம்நாத் கோவிந்தை, தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்கள் பலர் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து காவேரி வைத்தியசாலைக்கு சென்ற ராம்நாத் கோவிந், தி.மு.க. தலைவர் கருணாநிதியை பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் அங்கிருந்த தி.மு.க செயல்தலைவர் மு.க. ஸ்டாலின் மற்றும் சட்டமன்ற உறுப்பினரான கனிமொழி ஆகியோரிடம் கருணாநிதியின் உடல்நலம் குறித்து விசாரித்துள்ளார். பின்னர் தான் வருகை வந்த தனி விமானத்தில் மீண்டும் கேரளாவை நோக்கி புறப்பட்டு சென்றுள்ளார்.

மேலும் கருணாநிதியை சந்தித்தமை தொடர்பாகவும் அவர் விரைவில் குணமடைய வேண்டுமென வாழ்த்து தெரிவித்தமை தொடர்பாகவும் தனது டுவிட்டர் பக்கத்தில் ராம்நாத் கோவிந் பதிவேற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

# மருத்துவத்துக்கு பயன்படுத்தப்படும் இசைஞானி இளையராஜாவின் இசை



(சிங்கப்பூர்)

இசைஞானி இளையராஜாவின் இசையை மருத்துவத்துக்கு பயன்படுத்துவதற்கு சிங்கப்பூர் வைத்தியசாலையொன்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இளையராஜா 1000 படங்களுக்கு மேல் இதுவரை இசையமைத்துள்ளமையினால் அவரது பாடலுக்கு புகழை தேடி கொடுக்கும் பொருட்டு சிங்கப்பூரிலுள்ள மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலை இந்த செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.

குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக அவருடைய சில திரைப்பட பாடல்கள் மற்றும் அல்பங்கள் ஆகியவற்றை எலிசபெத் வைத்தியசாலை தற்போது பயன்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் இளையராஜாவும் இவ்வாராய்ச்சிக்காக சில பாடல்களை பிரத்தியேகமாக உருவாக்கி அவர்களிடம் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (7)

# கருணாநிதியின் உடல்நலம் விசாரிக்க வைத்தியசாலை வந்த தயாளுஅம்மாள்

(சென்னை)

தி.முக. தலைவர் கருணாநிதியின் உடல் நிலையில் சற்று பின்னடைவு ஏற்பட்டுள்ளதால் அவரைக் காண காவேரி வைத்தியசாலைக்கு முதன் முறையாக தயாளு அம்மாள் நேற்று வந்தார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு கடந்த மாதம் இறுதியில் திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டது.

கழுத்தில் பொருத்தப்பட்டு இருந்த செயற்கை சுவாச கருவியை மாற்றிய பிறகு அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. அதன் பிறகு கடந்த மாதம் 28ஆம் திகதி மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

அடுத்த 2 நாட்களில் கருணாநிதியின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. இதையடுத்து வைத்தியர்கள் கருணாநிதி உடல்நிலை சீராகி விட்டதாக தெரிவித்தனர். துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் கருணாநிதியை நேரில் பார்த்து நலம் விசாரிக்கும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டன.

இதன் காரணமாக தி.மு.க.வினர் நிம்மதி பெருமூச்சு விட்டனர். காவேரி வைத்தியசாலை முன்பிருந்து கிளம்பி சென்றனர். இதைத் தொடர்ந்து கருணாநிதியை 24 மணி நேரமும் வைத்தியர்கள் குழுவினர் கண்காணித்து வருகிறார்கள். நேற்று 10ஆவது நாளாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கருணாநிதி கழுத்தில் பொருத்தப்பட்டுள்ள டிரக்கியாஸ்டமி எனும் செயற்கை சுவாசக் கருவி வழியாக அவர் சுவாசித்து வருகிறார். சில சமயம் தானாகவே சுவாசித்து வருகிறார்.

இந்த நிலையில் வயது முதிர்வு காரணமாக கருணாநிதி உடல்நில்லையில் ஏற்றமும்-இறக்கமுமாக காணப்படுவதாக வைத்தியர்கள் சொல்கிறார்கள். கடந்த வாரம் கருணாநிதிக்கு கல்லீரலில் பிரச்சினை ஏற்பட்டது.

2 தினங்களுக்கு முன்பு கருணாநிதியின் கல்லீரலில் ஏற்பட்ட பிரச்சினை அதிகரித்தது. லண்டனைச் சேர்ந்த வைத்தியர் முகமது ரேலா வரவழைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆலோசனைப்படி வைத்தியர்கள் குழு தற்போது கருணாநிதிக்கு சிகிச்சை அளிக்கிறது.

கருணாநிதி உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டு இருப்பது தி.மு.க. தொண்டர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. கருணாநிதியின் குடும்பத்தினர் அனைவரும்நேற்றுவைத்தியசாலைக்கு விரைந்தனர். அவரது மனைவி தயாளு அம்மாள் முதன் முதறையாக கருணாநிதியைக் காண நேற்று காவேரி வைத்தியசாலைக்கு வந்தார். (7)

# இந்தோனேஷியா

# உயிரிழப்பு 95 ஆ



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் லம்பொக் தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 95ஆக அதிகரித்துள்ளது.

201 பேர் படுகாயமடைந்துள்ளதோடு, பலர் காணாமல் போயுள்ளனர். கட்டட இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்ற நிலையில், உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான கட்டடங்கள் சேதமாகியுள்ள நிலையில், மீட்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நிலநடுக்கத்தால் காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக, சிறு நோய்களுக்கு உள்ளாகி ஏற்கனவே வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்கள்

# ஹிலாரிக்கு எதிரான தகவல்

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல

# ரஷ்ய சட்டத்தரணியை என் மகன்

# ஒப்புக்கொண்டார் டொனா

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது ரஷ்யாவைச் சேர்ந்த சட்டத்தரணியைச் சந்தித்து ஹிலாரிக்கு எதிரான தகவல்களை பெற்றது சட்ட பூர்வமானது தான் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெறுவதற்காக ரஷ்யாவின் தலையீடு இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில் இதுபற்றி அமெரிக்க புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஹிலாரி கிளிண்டனை வீழ்த்தும் நோக்கில் அவருக்கு எதிரான தகவல்களை பெறுவதற்காக டொனால்ட் ட்ரம்பிற்கு சொந்தமான ட்ரம்ப் டவரில் ரஷ்யாவை சேர்ந்த பெண் சட்டத்தரணி ட்ரம்பின் மூத்த மகன், டொனால்ட் ட்ரம்ப் ஜூனியர் சந்தித்ததாக அமெரிக்காவின் பிரபல நாளிதழான நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், இந்த குற்றச்சாட்டிற்கு ட்ரம்ப் மற்றும் அவரது மகன் ஆகிய இருவரும் தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வந்தனர். எனினும், இது தொடர்பான விசாரணை தீவிரமடைந்துள்ள நிலையில், தனது மகன் சட்ட ரீதியிலான அபாயத்தில் சிக்கியிருப்பதை நினைத்து ஜனாதிபதி ட்ரம்ப் கவலையில் இருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டன.

இந்நிலையில், இதற்கு பதிலளிக்கும் விதமாக ரஷ்ய சட்டத்தரணியுடனான தனது மகனின் சந்திப்பை ட்ரம்ப்



ஒப்புக்கொண்டுள்ளார். இதுகுறித்து டுவிட்டரில் அவர் பதிவிட்டுள்ளதாவது,

தனது மகன் சட்ட ரீதியிலான அபாயத்தில் இருப்பதை நினைத்து தான் வருந்துவதாக வெளியான செய்திகள் முழுக்க கற்பனையானவை. தேர்தலில் எதிரியை வீழ்த்துவதற்காக எதிரியை பற்றிய தகவலை அடுத்தவர்களிடம் பெறுவது சட்ட பூர்வமான ஒன்று தான். அரசியலில் எல்லா நேர

# வெளிநாடு

## ாவில் நிலநடுக்கம்
## ஆக அதிகரிப்பு!



நிலையம் தெரிவித்துள்ளது.

மக்னிடியூட் அளவில் 7 ஆக பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம், கடலுக்கு அடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

இந்த சக்திமிக்க நிலநடுக்கத்தால் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாகவும், மின்சாரம் முற்றாக துண்டிக்கப்பட்டதாகவும் அந்நாட்டு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் வீட்டைவிட்டு வெளியேறிய மக்கள் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வைத்தியர்களும் வரவழைக்கப்பட்டு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. (7)

யில், முன் டந்த அனு நக்கு ாலை ர்கள்

அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். அத்தோடு, வெளியிடங்களில்வைத்தும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

நிலநடுக்கத்தை தொடர்ந்து பீதியில் இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மக்கள், அருகிலுள்ள தீவான பாலியில் தங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தில் சிக்கி நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளதோடு, பலர் காணாமல் போயுள்ளதாக அந்நாட்டு அனர்த்த முகாமைத்துவ

ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல்

## என்னைக் கொல்வதற்கு கொலம்பிய ஜனாதிபதி சதி

### வெனிசுவெலா ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கராகஸ்)

"என்னை கொல்வதற்கான சதி முயற்சியின் பின்னணியில் கொலம்பிய ஜனாதிபதி ஜுவான் மெனுவல் சென்டோஸ் இருப்பது தெளிவாக தெரிகின்றது.

இதனை எந்தவித சந்தேகமும் இல்லாமல் உறுதியாக கூற முடியும்" என வெனிசுவேலா ஜனாதிபதி மதுரோ நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் "என்னை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் பங்குள்ளது. மேலும் இதற்கான ஆரம்பகட்ட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன"

வெனிசுவெலா இராணுவத்தின் 81 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் அந்த நாட்டு ஜனாதிபதி மதுரோ உரையாற்றிக் கொண்டிருந்த போது அவர்மீது குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஜனாதிபதிக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை எனவும் 7 பாதுகாப்பு வீரர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும், இந்த தாக்குதலை நடத்தியது வலதுசாரி எதிர்க்கட்சி என அரசாங்கத் தரப்பிலிருந்து குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இந்த் தாக்குதலுக்கு இதுவரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

கடந்த ஆட்சியில் ஊழல்

## பாக்.நீதிமன்றில் இன்று ஆஜராகிறார் இம்ரான்கான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அரச ஹெலிகொப்டரை முறைகேடாகபயன்படுத்தியமை தொடர்பான வழக்கில் இம்ரான் கானை இன்று ஆஜராகும்படி மனு அனுப்பப்பட்டுள்ளது.



பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற தெக்ரிக்-இ-இன் சாப் கட்சி தலைவர் இம்ரான் கான் எதிர்வரும் 11ஆம் திகதி அந்நாட்டின் பிரதமராக பதவி ஏற்க உள்ளார்.

இந்த நிலையில் அவர் மீது ஊழல் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் கைபர்-பக்துன்குவா மாகாணத்தில் இவரது பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சாப் கட்சி ஆட்சி நடத்தியது.


அப்போது அவர் அரசுக்கு சொந்தமான ஹெலிகொப்டரை தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மொத்தம் 72 மணிநேரம் உபயோகித்து இருப்பதாகவும் அதற்குரிய வாடகை கட்டணம் ரூ.2 கோடியே 17 இலட்சம் செலுத்தவில்லை என்றும் ஊழல் குற்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய பொறுப்புடைமை நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. கடந்த மாதம் (ஜுலை) 18 ஆம் திகதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு இம்ரான்கானுக்கு மனு அனுப்பப்பட்டது.

தேர்தல் பணியில் இருந்ததால் அவர் ஆஜராகவில்லை. அவரது சட்டத்தரணி ஆஜரானார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது இன்று நீதிமன்றில் ஆஜராக இம்ரான் கானுக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது. (7)

வல் திரட்டல்

## தலின் போது கன் சந்தித்தார்
## ாால்ட் ட்ரம்ப்



த்து வது. ான த்து ான வை. காக தவ ான நேர

ங்களிலும் இது போன்று நடைபெற்று வந்துள்ளது. ஆனால், அதைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்துள்ளார்.

முதலில் ரஷ்ய சட்டத்தரணியுடனான தனது மகனின் சந்திப்பை ட்ரம்ப் மறுத்து வந்த நிலையில் தற்போது அதை ஒப்புக்கொண்டது போன்ற கருத்து தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (7)

### பிரிட்டன் மீது மரியாதை உள்ளது



(பிரிட்டன்)

பிரித்தானியா மீது தான் மிகுந்த மரியாதை கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். பென்சில்வேனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ட்ரம்ப் பிரித்தானிய மகாராணியுடன் கடந்த மாதம் இடம்பெற்ற சந்திப்பின் சுவாரஸ்யங்களை பகிர்ந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார். (7)

## வெனிசுவெலா ஜனாதிபதியை கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்ட 6 பேர் அதிரடிக் கைது

(கராகஸ்)

வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ பங்கேற்ற நிகழ்ச்சியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் தொடர்புடைய 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

வெனிசுவெலா நாடு அதிக எண்ணெய் வளம் நிறைந்தது. இங்கு எண்ணெய் உற்பத்தியால் அதன் பொருளாதாரம் உயர்ந்து இருந்தது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக பொருளாதார நெருக்கடியில் சிக்கி வெனிசுவெலா தவித்து வருகிறது.

அந்நாட்டின் ஜனாதிபதி பதவியில் இருந்த ஹியுகோ சாவேஸ் கடந்த 2013ஆம் ஆண்டு மறைந்த பின்னர் அவரது அரசியல் வாரிசான நிகோலஸ்மதுரோ (வயது 55) ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிலையில், அந்நாட்டின் இராணுவத்தின் 81 ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியில் நிகோலஸ் மதுரோ நேற்று முன்தினம் கலந்து கொண்டார்.

அவர், தொலைக்காட்சி மூலம் அந்நாட்டு மக்களிடம் நேரலையில் பேசிக் கொண்டிருந்தபொழுது, வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட சிறிய ரக ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்) வெடிக்க செய்யப்பட்டன.

இதனை அடுத்து நிகோலஸ் உடனடியாக தனது பேச்சினை நிறுத்தினார். இந்த தாக்குதலில் அதிர்ஷ்டவசமாக அவர் காயமின்றி உயிர் தப்பினார்.

எனினும், பாதுகாப்புப் படை வீரர்கள் 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில், இந்த தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடைய 6 பேரை பொலிஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

இது குறித்து வெனிசுவெலா உள்துறை அமைச்சர் நெஸ்டர் ரெவரோல் தெரிவிக்கையில், தாக்குதல்தாரிகள் 6 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் பயன்படுத்திய வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தங்கியிருந்த ஹோட்டல் அறைகளில் இருந்து முக்கிய தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (7)

# அமைச்சர்களின் சம்பள அதிகரிப்பு

## மகிந்தவின் பழையயோசனை!

### சபை முதல்வர் அமைச்சர் கிரியெல்ல சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்கவேண்டுமென, கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்துள்ள, சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, இது நல்லாட்சி அரசாங்கத்தின் யோசனை அல்லவென்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால், 2006 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட யோசனையென்றும் தெரிவித்துள்ளார்.

மகிந்தவின் அந்த யோசனைக்கு அமையவே, இந்த சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதற்கு கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மாத்தளை-எல்கடுவ பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ், 10 தோட்டங்களில் தொழில்புரியும் 800 தொழிலாளர் குடும்பங்களுக்கு, 7 பேர்ச், காணியுறுதிக்கான, "பச்சைபூமி உறுதிப்பத்திரம்" வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த காலங்களில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டன.

அதனடிப்படையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சட்டமொன்று கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டும் உள்ளது.

அதன்பிரகாரம், நீதியரசர்களின் சம்பள அதிகரிப்புக்குச் சமாந்தரமாக, மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரின் சம்பளமும் அதிகரிக்கும்" என்றார்.

"நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில், கடந்த வாரம் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில், நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது முன்வைக்கப்பட்ட மேற்படி யோசனைக்கு, சகல கட்சிகளின் தலைவர்களும் கைகளை தூக்கி இணக்கம் தெரிவித்தனர்.

"அதுதான் இப்போது பிரச்சினையாகியுள்ளது. என்றாலும், இதனை நாங்கள் இன்னும் அமுல்படுத்தவில்லை" என்று தெரிவித்த அவர், மக்களின் பிரச்சினை தங்களுக்கு நன்கு தெரியும் என்றும் தெரிவித்தார். (இ-7)

## டிசெம்பருக்குள் எட்கா குறித்த பேச்சுக்களை முடிக்க இணக்கம்

(கொழும்பு)

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு (எட்கா) தொடர்பான பேச்சுக்களை இந்த ஆண்டில் டிசெம்பர் மாதத்துக்குள் முடிக்க அரசாங்கம் இந்தியாவுடன் இணங்கியுள்ளது.

டில்லியில் உள்ள இந்திய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

"ஆரோக்கியமான வகையில் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

எட்கா உடன்பாடு குறித்த பேச்சுக்களை டிசெம்பருக்குள் முடிக்க இரண்டு நாடுகளும் இலக்கை நிர்ணயித்துள்ளன" என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்தானந்தவுக்கு முதுகெலும்பு இல்லை!

### குமார வெல்கம பாய்ச்சல்





(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கூட்டணி ஆட்சியமைக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்ட போது, கூட்டத்தில் எழுந்து பேச மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு முதுகெலும்பு இருக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம பற்றி, பத்திரிகை ஒன்றிடம் வெளியிட்டிருந்த கருத்துக்கு குமார வெல்கம நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பதிலளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், நுகேகொடையில் நடைபெற்ற பொதுக் கூட்ட மேடையில் ஏறவும் மகிந்தானந்தவுக்கு முதுகெலும்பு இருக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளராக நான் 36 ஆண்டுகள் பதவி வகித்திருக்கின்றேன்.

அந்தக் காலத்தில் மக்களுக்கு தவறாக எதனையும் கூறியதில்லை எனவும் குமார வெல்கம தெரிவித்தார்.

இதேவேளை, குமார வெல்கம பற்றி பேசி பிரயோசனமில்லை என்றும் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். (இ-7)



## இலங்கை- சிங்கப்பூர் உடன்படிக்கை ஒழுங்குமுறை அடிப்படையிலேயே

### அஜித் பெரேரா தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

இலங்கை - சிங்கப்பூர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது ஒரு ஒழுங்குமுறையான அடிப்படையிலேயே என்று மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இராஜாங்க அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்ற விவாதம் மூலம் அது தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாகவும், நிபுணர்கள் எவரும் உடன்படிக்கையை விமர்சிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தாமரை மொட்டுக்கு ஆதரவான வைத்தியர்களும் தாமரை மொட்டு அரசியல்வாதிகளுமே விமர்சிப்பதாக அவர் கூறினார்.

எதிர்காலத்தில் வாகனங்களின் விலை குறைக்கப்படும் என்றும், நாட்டின் பணம் வெளிநாடுகளுக்கு சென்று கொண்டிருப்பதை தடுப்பதற்காக தற்காலிக தீர்வொன்றுக்கு வருமாறு பிரதமர் நிதியமைச்சருக்கு வழங்கிய ஆலோசனைப் படியே வரி அதிகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### சுயநல உணர்வு தவறா?

உலகில் உள்ள அத்துணை ஜீவராசிகளும் தத்தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எத்தனையோ விதத்தில் இயல்பாகவும், பெருமளவில் முயற்சி மேற்கொண்டும் போராடி வருகின்றன.

மனிதன் மட்டும் ஒரு கட்டம் தாண்டிப் போய் உயிர் மற்றும் தன் நலனை மட்டுமல்லாது, தன்னைச் சார்ந்தவர்களின் நலனையும் சேர்த்துக் காப்பாற்றிக் கொள்ளப் போராடுகிறான்..

ஆனால் சுயநலமாக நடந்து கொள்வதைப் பார்த்து எல்லோரும் ஏனோ கோபப்படுகிறார்கள்; அல்லது ஆதங்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்களை நான் கேள்விப்படும் போது அது எனக்கு ஒரு செய்தியாகவே இருப்பதில்லை. காரணம் இது தான் மனித இயல்பு என்று நான் சமாதானம் அடைகின்றேன்.

ஆனால் இதை மீறி, சுயநலத்தைத் துறந்து விட்டுப் பொதுநலமான செயல்களில் ஈடுபட்டு உயிரையோ தங்களது உடைமைகளையோ சிலர் தியாகம் செய்கின்றார்கள் என்றால், அவர்கள் தாம் மனிதர்களுள் மாணிக்கங்களாகத் திகழ்கிறார்கள்.

இந்த அளவிற்கு நம்மால் உயர முடியவில்லை என்றாலும் அந்தச் சுயநலத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாதபடி நடந்து கொள்ள நமக்குத் தெரிய வேண்டும்.

உதாரணமாக உங்களது ஜன்னலோர இருக்கை வேண்டுமென்று யாராவது கேட்டால் " எனக்கு சளித் தொல்லை (அல்லது வெற்றிலைப் பாக்கு போடும் பழக்கம் உண்டு) எனவே ஜன்னலோரத்தை விட்டுத் தரமுடியாத நிலை " என்று சொல்லுங்கள்.

மேற்படிப்புத் தேவையில்லை என்று மறுக்கிறார் அப்பா. அவரிடம் என்னை நீங்கள் படிக்க வைத்தால் உங்களுக்குக் காலம் பூராகவும் நான் உதவியாக இருப்பேன். இப்போதே நிறுத்திவிட்டால் மாதா மாதம் என் செலவுக்கு உங்களைத் தான் எதிர்பார்ப்பேன் என்று ஒரு பொடி வைத்தால் போதும், படிப்பைத் தொடர அவர் உதவுவது உறுதி!

அதே நேரத்தில் உதவும் உள்ளம், இரக்க மனம், பெருந்தன்மை ஆகியவற்றைக் கைக்கொண்டு நடந்து கொண்டு, சிறு சிறு தியாகங்களைச் செய்து வந்தால், அச்செயலானது, சுய நலத்தினால் நாம் பெறக்கூடிய நன்மைகளை விட, அதிகமான நன்மைகளைப் பெற்றுத் தரும் என்பது மட்டும் நிச்சயம்.

**லேனா தமிழ்வாணன்**

# நீங்கள் அனைவரும் செய்தியாளராகலாம்!

செய்தியாளர்கள் என்ற எல்லை கடந்து பொதுமக்கள், நிறுவனத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் என சகலரும் செய்திகளை, தகவல்களை வழங்குகின்ற வாய்ப்பை வலம்புரி நாளிதழ் உங்கள் அனைவருக்கும் மகிழ்வோடு வழங்குகிறது.

**எந்த வேளையிலும் நீங்கள் அறிந்த செய்திகள், தகவல்கள், சம்பவங்கள், நிகழ்வுகள் அவற்றின் புகைப்படங்கள் என்பவற்றை 24 மணி நேரமும் வலம்புரி நாளிதழுக்கு வழங்குவதற்கான விசேட ஏற்பாட்டை உங்கள் வலம்புரி செய்து தருகிறது. இவ்வாறு நீங்கள் தகவல்களை, செய்திகளை வழங்குவதன் மூலம்**

- உங்கள் வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள்
- உங்கள் நிறுவனங்கள் வழங்கும் சேவைகள்
- உங்கள் நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புகள் புலமைப்பரிசில் திட்டங்கள்
- உயர் கல்வி நிறுவனங்களில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் கற்கை நெறிகள், பயிற்சிகள்
- வங்கிகளில் மக்கள் பெறக்கூடிய குறைந்த வட்டிக் கடன்கள், இலகு கடன்கள்
- வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உதவுகின்ற நிறுவனங்களின் உதவித்திட்டங்களைப் பெறுகின்ற வழிமுறைகள்

என்பவற்றை பொதுமக்கள் அறியவும் அதன்மூலம் நன்மை பெறவும் முடியும்.
இவ்வாறு தகவல்களை வழங்கி பொதுமக்களுக்கு உதவுவதன் மூலம் நீங்கள் பேருதவி புரிகின்றீர்கள்.

இதற்கு மேலாக...

- உங்கள் பிரதேசங்களில் நடக்கின்ற ஆக்கிரமிப்புக்கள், திட்டமிட்ட குடியேற்றங்கள், நில அபகரிப்புக்கள்
- நியாயபூர்வமாகக் கிடைக்க வேண்டிய விடயங்கள் இழுத்தடிக்கப்படும் சம்பவங்கள்
- சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள்
- புனரமைக்கப்படாத வீதிகள், பாலங்கள், போக்குவரத்துச் சீரின்மைகள் போன்ற பல விடயங்களையும் வெளிப்படுத்தி அவற்றைச் செப்பனிட முடியும்.

இதற்காகவே நீங்கள் அனைவரும் செய்திகளை வழங்குகின்ற சந்தர்ப்பத்தை வலம்புரி ஏற்பாடு செய்துள்ளது.
தேவையான இடங்களில் இரகசியம் நூறுவீதம் பாதுகாக்கப்படும்.

**நீங்கள் அறிந்த செய்திகளை, தகவல்களை, சம்பவங்களை, புகைப்படங்களை அனுப்புவதற்கு**

தொலைபேசி:-021 567 1541 / 070 220 2206
தொலைநகல்:- 021 222 7829
வைபர்:- 076 636 3378
E-mail:- valampuriijaffna@gmail.com

தபால் முகவரி : பிரதம ஆசிரியர் , வலம்புரி பத்திரிகை, இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்.

**வலம்புரியில் இணைந்து பிரதேச செய்தியாளராக பணியாற்ற விரும்பினால்**
தங்களது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை
**பிரதம ஆசிரியர், இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
எனும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "செய்தியாளருக்கான விண்ணப்பம்" எனத் தயவு செய்து குறிப்பிடவும்.

## சௌமியமூர்த்தியின் சிந்தனைகளை செயற்படுத்தும் செயல்வீரன் இராதா

### கோடீஸ்வரன் எம்.பி.பாராட்டு

(ஹற்றன்)

மலையகத்துக்கு மட்டுமன்றி, வடக்கு-கிழக்கு வாழ் மக்களுக்கும் சேவைசெய்கின்ற ஒரு தலைவராகவும், சௌமியமூர்த்தி தொண்டமானுடைய ஆசைகள், எண்ணங்கள், சிந்தனைகளைச் செயற்படுத்துகின்ற ஒரு செயற்பாட்டாளராகவும் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனை தான் பார்ப்பதாக, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோடீஸ்வரன் தெரிவித்தார்.






மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உபதலைவருமான வே.இராதாகிருஷ்ணனுக்கு கௌரவிப்பு விழா, ஹற்றன் டி.கே. டபிள்யூ மண்டபத்தில், நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "கல்வி அமைச்சர் இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன், கல்வியில் மலையகத்தில் மட்டும் புரட்சியை ஏற்படுத்தவில்லை, வடக்கு, கிழக்கிலும் கூட அவர் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்" என்றும் தெரிவித்தார். (இ-7)

## என்னை 'Sir' கூறி அழைக்கவும் நகரசபைத் தலைவர் அறிவித்தல்

(கொழும்பு)

மஹரகம நகரசபை தலைவர் டிராஜ் பியரத்ன விடுத்த அறிவித்தல் சமூக ஊடகங்களில் பிரபலமடைந்து வருகின்றது.




கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சுயாதீன குழுவில் போட்டியிட்டு மஹரகம நகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றிய தலைவர் டிராஜ் பியரத்ன விடுத்த அறிவித்தலே சமூக ஊடகங்களில் கேளிக்கை செய்யப்பட்டு வருகின்றது.

நகரத்தின் முதல் பிரஜை என்பதாலும் இந்த நிறுவனத்தில் பிரதான நிறைவேற்று பதவியை வகிப்பதாலும் அனைத்து அதிகாரிகள் மற்றும் பொதுமக்களும் தன்னை 'சேர்' கூறி அழைக்க வேண்டும் என மஹரகம நகரசபை தலைவர் டிராஜ் பியரத்ன அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

குறித்த அறிவித்தலை அடுத்து அவரது தொலைபேசி இலக்கம் பகிரப்பட்டு, அதற்கு அழைத்து Sir கூறுமாறு தெரிவித்தும் குறித்த அறிவித்தலை கேளிக்கை செய்யும் விதத்திலும் சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் பல்வேறு பதிவுகளை பகிர்ந்து வருகின்றனர்.

மஹரகம நகரசபைக்கு மொட்டு சின்னத்தில் (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன) தாக்கல் செய்யப்பட்ட நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்ட பின்னர் குறித்த கட்சியால் இந்த சுயாதீன குழுவுக்கே ஆதரவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வசீம், லசந்த கொலை விசாரணை இடைநிறுத்தம் மகிந்த-ரணில் தொடர்பே பிரதான காரணம்

## ஜே.வி.பி. தலைவர் அநுர குற்றச்சாட்டு

(கொழும்பு)

வசீம் தாஜுடீன் மற்றும் லசந்த விக்கிரமதுங்க ஆகியோரின் கொலை தொடர்பான விசாரணைகள் முன் னெடுக்கப்படாமல் இடை நிறுத்தப்படுவதற்கு பிரதான காரணம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் காணப்படும் இரகசியத் தொடர்பே ஆகும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அம்பாறை பொல்வத்த பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு



உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் அரசாங்கத்தைப் பாதுகாத்துக் கொண்டு அவர்களைத் தாக்கி வருவதாக மகிந்த ராஜபக்ஷ எம்மீது குற்றம் சாட்டியுள்ளார். அவர் அந்த நிலைமைக்கு ஆளாகியிருப்பது போன்று, நாம் அந்த நிலைக்கு விழுந்துவிடவில்லை.

நாம் மகிந்தவின் மடியிலிருந்துகொண்டு அரசியல் செய்யவும் விரும்பவில்லை. ரணிலின் மடியில் இருந்து கொண்டும் அரசியல் செய்யவில்லை. மகிந்தவோ, ரணிலோ எம்மை விசேடமாக பாதுகாக்க வேண்டிய தேவையில்லை. ஏனெனில், நாம் அவர்களுக்கு கடன் இல்லை.

இருப்பினும், இந்த அரசாங்கத்தில் அவர் எவ்வளவுக்கு பாதுகாப்புப் பெற்றிருக்கின்றார் என்று நாம் மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்கின்றோம். தாஜுடீன், லசந்த ஆகியோரின் கொலை தொடர்பான விசாரணை இடைநிறுத்தப்பட்டிருப்பதும் மகிந்த - ரணில் இடையில் காணப்படும் தொடர்பு காரணமாகவே ஆகும் எனவும் அநுர குமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாகன விபத்தில் சிக்கிய சிறுவன் உட்பட மூவர் பலி!

(கொழும்பு)

மொனராகலை, வெல்லவாய பிரதான வீதி, கும்புக்கன சந்திப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரு சிறுவன் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

லொறி ஒன்று பேருந்து ஒன்றை முந்திச் செல்லும் போது எதிரே வந்த ஆட்டோ நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஆட்டோவில் பயணித்த சாரதி உட்பட நான்கு பேர் காயமடைந்து மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது அதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

8 வயது சிறுவன், 22 வயது இளைஞன் மற்றும் 19 வயது யுவதி ஆகிய மூவருமே உயிரிழந்துள்ளதுடன், 49 வயதுடைய பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

விலஓய, எதிமலே வீதி பிரதேசத்தைச் சேர்ந்த நபர்களே விபத்தில் சிக்கியவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஐ.நா. தடையை மீறி இலங்கைக்கு ஆடைகளை அனுப்பிய வடகொரியா

(ஜெனிவா)

ஐ.நாவின் தடைகளை மீறி இலங்கைக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்திருப்பதாக வடகொரியா மீது ஐ.நா அறிக்கை ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையினால் வடகொரியா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை கண்காணிக்கும் சுதந்திரமான நிபுணர்கள் குழு, 2017 ஒக்டோபர் தொடக்கம் 2018 மார்ச் வரையான 6 மாத காலப்பகுதிக்கான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே, குறிப்பிட்ட ஆறு மாத காலப்பகுதியில் ஐ.நாவின் தடைகளை மீறி இலங்கைக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்ததாக வடகொரியா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள், இலங்கை, சீனா, கானா, இந்தியா, மெக்சிக்கோ, தாய்லாந்து, துருக்கி, உருகுவே உள்ளிட்ட நாடுகளுக்கு 100 மில்லியன் டொலருக்கும் அதிகமான ஆடைகளை ஏற்றுமதி செய்து, ஐ.நா.வின் தடையை வடகொரியா மீறியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 3 விதி எண் 5

குரு, புதன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் நேர்மையுடனும் நீதியுடனும் பேசுவார்கள். மிகுந்த சுறுசுறுப்புடன், மிகவும் விரைவாகப் பணியாற்றுவார்கள். பலரை வைத்து வேலை வாங்கும் திறமை வாய்ந்தவர்கள். பிற்கால வாழ்க்கை பிரபலத்துடன் இருக்கும். வீடு, வாகனம், தொழில் என்று எல்லா வளங்களோடும் வசதியாக வாழ்வார்கள். மிகுந்த சாமர்த்தியசாலிகள். இவர்கள் எளிதில் யாரிடமும் ஏமாற மாட்டார்கள். தனக்குக் கீழ்தான் அனைவரும் அடிபணிந்து நடக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். மதங்களில் தீவிரம் உடையவர்கள். தனது சொந்த மதத்தவருக்காக உலகத்தையே எதிர்க்கத் துணிவார்கள். முயற்சியால் முடியாதது எதுவுமில்லை என்ற கருத்தை உடையவர்கள். ஜன வசியம் உள்ளவர்கள். நுண்ணிய அறிவும், ஆராய்ச்சி மனமும் உடையவர்கள்.

இயல், இசை, சினிமா போன்ற கலைத் துறைகளில் புகழ் பெறுவார்கள். மற்றவர்கள் இவருடைய கொள்கைகளைப் பின்பற்ற வேண்டுமென்று கூறுவார்கள். மற்றவர்கள் சொல்லுக்கு ஒருபோதும் கட்டுப்படவே மாட்டார்கள். சுதந்திர மனதுடன் உலாவருவார்கள். அடிமைத்தனத்தை அறவே வெறுப்பார்கள். தெய்வ பக்தியுள்ள மனிதர்கள். எதிரியை திட்டமிட்டுச் சமயம் பார்த்து வீழ்த்தி விடுவார்கள். கலையுணர்வு மிகுந்தவர்கள். வருமுன் காத்துக் கொள்ளும் சக்தியிருக்கும். இராஜதந்திரம் உடையவர்கள். இரகசியம் காப்பது இவர்களுக்குக் கைவந்த கலை. தூரதேச நண்பர்கள் கிடைப்பார்கள். அயல்நாட்டுப் பிரயாணம் அடிக்கடி செல்ல இவர்களுக்கு அதிர்ஷ்டமிருக்கும். விஞ்ஞான ஆராய்ச்சிகளில் புகழ் கிடைக்கும். சூழ்ச்சிகரமான புத்தியுடைய இவர்கள் எப்போதும் திட்டம் தீட்டிக் கொண்டேயிருப்பார்கள்.

சிலருக்கு அமைதிக் குறைவும், ஆரோக்கியக் குறைவும் ஏற்படும். உலக வரலாற்றில் இடம் பிடிக்கக் கூடியவர்கள். கண்டிப்பும் கடமையுணர்ச்சியும் அதிகமுடையவர்கள் போலத் தோன்றினாலும் மிகவும் இளகிய மனமுடைய நபர்கள். காலச் சூழ்நிலைக்கேற்பத் தோன்றும் புதுமைகளை, புரட்சிகரமாக மக்களிடம் புகுத்தும் வல்லமை வாய்ந்தவர்கள். குற்றம் புரிந்தவர்களை மன்னிக்கும் மனமுடையவர்கள். சட்டத்தையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் நன்கு அறிந்தவர்கள். தியானம், குண்டலினி, அதீத சக்திகளை அறிந்து வைத்திருப்பார்கள். இரவு-பகல் பாராமல் உழைக்கக் கூடியவர்கள்.

பிறருடைய சொத்துக்கு ஆசைப்பட மாட்டார்கள். குருவருள் இன்றி திருவருள் இல்லை என்ற கருத்துடையவர்கள். பிறருக்குக் கலைகளைக் கற்றுக் கொடுப்பதில் ஆசானாக விளங்குவார்கள். நாட்டின் முக்கிய பொறுப்புகளை நிர்வகிக்கும் நிர்வாகிகள். மனித சமுதாயத்தைச் சீர்படுத்தும் எழுத்தாளர்கள். வெற்றி, தோல்விகளைக் கண்டு ஒருபோதும் மனம் மயங்க மாட்டார்கள். ஆன்மீக




சிந்தனையில் மனம் ஒன்றிப் போகும். இளமையிலேயே சிந்தனை வளமிக்கவராதலால் வழுக்கை விழுந்து விடும். யாரையும் ஏமாற்ற மாட்டார்கள். தன் சொல்லுக்குக் கட்டுப்படும் நண்பர்களைப் பெற்றிருப்பார்கள். மக்களுக்குப் புதிய சிந்தனைகளை யூட்டி, நல்ல மக்கள் தலைவனாக வலம் வருவார்கள். எக்காரியத்தையும் விரைவாகவே செய்து முடிப்பார்கள். குழந்தைபோல நடந்து கொள்வார்கள். குதூகலமான மனிதர்கள். புதுமையை அதிகம் விரும்பக் கூடியவர்கள். லீலா விநோதமிருக்கும். பல பெண்களின் தொடர்புகள் இருக்கும். பல நற்குணங்கள் பெற்றவர்கள். அழகின் மீது மனதைப் பறிகொடுப்பார்கள். திறமைசாலி மனிதர்கள்.

மற்றவர்களைத் தனது பேச்சு மூலம் கவர்ந்திழுத்து விடுவார்கள். எளிமையைக் கடைப்பிடிப்பார்கள். கடவுள் பக்தி அதிகமுண்டாகும். சட்டம், அரசியல், சாஸ்திர வழிமுறைகளை நன்றாகக் கடைப்பிடிப்பார்கள். எந்நேரமும் சுறுசுறுப்பாகவே இருப்பார்கள். தர்மவான்கள். தன்னிச்சையாகச் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். மன அமைதியை நாடுவார்கள். ஞாபக சக்தி மிக்கவர்கள். வயது செல்லச் செல்லப் பிரபலமுண்டாகும். எறும்பைப் போல சுறுசுறுப்புண்டாகும். தோட்டம், இயற்கை, மலர்கள் மீது மிகுந்த ஈடுபாடு உண்டாகும். தன்னிடம் பல திறமைகள் இருந்தும், இல்லாதது போலக் காட்டிக் கொள்வார்கள்.

எதிலும் முதலிடத்தை நோக்கியே குறியாக இருப்பார்கள். சுகமான வாழ்க்கை அமையும். குடும்பத்தில் சந்தோசம் கூடும். புண்ணிய காரியம் பல செய்வார்கள். அரசியல் மார்க்கமறிந்தவர்கள். பல பெரிய சொத்துக்கள் சேரும். இலக்கண நயத்தோடு பேசுவார்கள். இவர்கள் மனதில் தோன்றும் எண்ணங்கள் எதையும் வெளியிடாமல் மறைத்து விடுவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
3,12,21,30,9,18,27,5,14,23

**துரதிர்ஷ்ட திகதிகள்**
6,15,24

**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர் நீலம், மஞ்சள், ரோஸ், ஒரேஞ், கத்தரிப்பூநிறம், சாம்பல்

**துரதிர்ஷ்ட நிறங்கள்**
கறுப்பு, பச்சை, சிவப்பு, இருண்ட நிறங்கள்

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**
கனகபுஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்கபுஷ்பராகம், எமிதிஸ்ட், வைரம், சிர்க்கான்.

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

11

'History begins with Written documents' எழுத்து ஆதாரங்களுடன் வரலாறு ஆரம்பிக்கின்றது என்பது வரலாற்று அறிஞர்களால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடு. மனிதவர்க்கத்தின் பரிணாம வளர்ச்சியின் ஓர் உயர் நிலையிற்தான் எழுத்து வடிவம் தோற்றம் பெறுகின்றது. இதுவே வரலாற்றுக் காலமாகப் பரிணமிக்கின்றது. எழுத்து வடிவம் தோன்றுவதற்கு முன்னதான மனித வரலாறு, வரலாற்றுக்கு முந்திய காலம் எனக் கருதப்படுகின்றது.

'Lands without people are lands without history'. மக்கள் இல்லாத பிரதேசம் வரலாறு இல்லாத பிரதேசமாகின்றது. எனவே, மனிதனின் ஆரம்பத் தோற்றத்துடன் தான் ஒரு தேசத்தினுடைய வரலாறு, வரலாற்றுக்கு முந்திய காலமாக (Pre-historic period) வரலாற்றில் இடம் பெறுகின்றது.

எனவே மனிதனின் ஆரம்பத் தோற்றம் ஒரு பிரதேசத்தில் அல்லது நாட்டில் எப்பொழுது? எங்கே? எவ்வாறு? தோற்றம் பெற்றது என்ற கேள்விகளுக்கு விடை காண்பது, வரலாறு, தொல்லியல், புவியியல், மானிடவியல், மொழியியல், சமூகவியல் துறைகள் சார்ந்த அறிஞர்களுக்கு ஒரு பிரச்சினைக்குரிய விடயமாக இருந்து வருகின்றது.


வரலாற்று ஆசிரியர் ஒரு தேசத்தின் வரலாற்றை ஆய்வு செய்யும் பொழுது வரலாற்றுக்கு முந்திய காலம், வரலாற்றுக்காலம் என இரு பெரும் பிரிவுகளுக்குள் பொதுவாக பகுப்பது வழக்கம். வரலாற்று முந்திய காலமானது எதுவித எழுத்து ஆதாரங்களும் அற்ற ஒரு தேசத்தினதும், மக்களினதும் வரலாறாக இருக்கும்.

மேலும், வரலாற்று ஆசிரியர் வரலாற்றுக்கு முந்திய காலத்தையும் வரலாற்றுக் காலத்தையும் பல காலப்பிரிவுகளாக வகுத்து ஆய்வுகளை மேற்கொள்வர்.

சிறப்பாக, வரலாற்றுக்கு முந்திய காலத்தை பழைய கற்காலம் (Palaeolithic Age), இடைக் கற்காலம் (Mesolithic Age), புதிய கற்காலம் (Neolithic Age), இரும்புக் காலம் (Iron Age) என்ற பகுப்பினுள்ளும், வரலாற்றுக் காலத்தைப் புராதன வரலாற்றுக்காலம், மத்திய வரலாற்றுக் காலம், நவீன வரலாற்றுக் காலம் எனவும் பொதுவாகப் பகுத்து ஆய்வுகளை மேற்கொண்டு வரலாற்றை எழுதுவர்.

ஆதிமனிதன் தன் பரிணாம வளர்ச்சிப் பாதையில் நாடோடியாக, நாகரிகம் அற்றவனாகக், கற்களைப் பயன்படுத்தி வேட்டையாடி வாழ்ந்த நீண்ட காலப்பகுதியைக் கொண்டதாக, அதாவது பல்லாயிரக்கணக்கான வருடங்களை உள்ளடக்கியதாக, இக் கற்காலங்கள் காணப்படுகின்றன.

ஆதிமனிதனின் பரிணாம வளர்ச்சியின் ஒரு காலகட்டத்தில், கற்களுக்குப் பதிலாக இரும் பைப் பயன்படுத்தி, நாடோடி வாழ்க்கையிலிருந்து முன்னேறி, இயற்கை வளங்கள் உள்ள இடங்களில் தனது வாழ்க்கையை நிலையாய் அமைத்து வாழத் தொடங்கிய காலமாக இரும்புக்காலம் காணப்படுகின்றது. இதனை இரும்புக்காலப் பண்பாடு என்று வரலாற்று ஆசிரியர் பொதுவாக அழைப்பர்.



வேடர்கள் (CHARLES SCOWEN AND CO. 1875)

> அப்பொழுது கறுப்பர் என்றும் வெள்ளையர் என்றும் வேறுபடுத்தக்கூடிய வர்க்கங்கள் இருக்கவில்லை. தோல் நிறத்தாலும் தலை முடியின் தன்மையாலும் கண் அமைப்பாலும் வேறுபடுகின்ற சீனர், ஐரோப்பியர் மற்றும் ஆபிரிக்கர் என்று பிரித்துக் காட்டக்கூடிய இனங்கள் இருக்கவில்லை

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

மேலும், மனிதன் நிலையான வாழ்க்கை வாழத் தொடங்கி நாகரிகம் அடைகின்ற ஒரு நிலையில், அவனால் பேசப்பட்டு வந்த மொழி எழுத்து வடிவம் பெறும் வேளையில், எழுத்தாதாரங்கள் கொண்ட வரலாற்றுக் காலம் தோற்றம் பெறுகின்றது.

இவ் ஆய்வில் குறிப்பாக, வரலாற்றுக்கு முந்தியகாலம், வரலாற்றுக் காலம் எனும் இரு பெரும் பிரிவுகளுக்குள் நின்றே இலங்கைத் தமிழரின் ஆரம்பத் தோற்றம் பற்றி, அவர்களுடைய அடையாளம் பற்றி ஆய்வு செய்யப்படும்.

தேவை கருதிக் கற்காலம், இரும்புக்காலம் என்ற காலப் பிரிவுகளுக்குள் நின்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறான அணுகுமுறை, இலங்கைத் தமிழர் பற்றிய ஒரு பூரணமான வரலாற்றினை விளங்கிக் கொள்வதற்கு மிக அத்தியாவசியமாகின்றது.

இலங்கையில் ஆதிமனிதர் பற்றி, குறிப்பாக இலங்கைத்தமிழர் பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடனும், விஞ்ஞான ரீதியாகவும் ஆய்வுகளை மேற்கொண்ட வரலாற்று அறிஞர் பேராசிரியர் இந்திரபாலா வெளியிட்ட "இலங்கைத் தமிழர்: ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு" என்ற நூலிற் கீழ் கண்டவாறு கூறப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழர்களின் ஆரம்பத் தோற்றம் பற்றி விளங்கிக் கொள்வதற்கு மிக இன்றியமையாததாகின்றது.

"இதுவரை கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு, ஆபிரிக்கக் கண்டத்திலேதான் ஆதிமனிதர் தோன்றி பிற இடங்களுக்குச் சென்று குடியேறினர் என அறிவியலாளர் கருதுவர். மனிதவர்க்கத்தைச் சேர்ந்தோர் என்று கருதக்கூடிய பண்புகளைக் கொண்ட ஆதிமனிதருடைய எச்சங்கள் ஆபிரிக்காவில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பழைமையாகக் கருதப்படுவது 2001இல் சட் (Chad) நாட்டில் கிடைத்த சான்றாகும்.

இது ஏறத்தாழ ஏழு மில்லியன் (எழுபது இலட்சம்) ஆண்டுகளுக்கு முற்பட்டது. அந்நிலையில் இன்றைய மனித வடிவம் காணப்படவில்லை. அப்படியான வடிவம் உருவாகப் பல இலட்சம் ஆண்டுகள்சென்றன. நீண்டகாலப் பரிணாம வளர்ச்சியின் பின் இன்றைய மனித வடிவம் தோன்றியது.

இதன்பின் இற்றைக்கு 60,000 ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவில் இருந்து மனித வர்க்கத்தினர் வேறிடங்களுக்குச் செல்லத் தொடங்கினர். இவர்களே இன்று உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் மக்களுடைய முன்னோர்கள்".

மேலும், அவர் தொடர்ந்து கூறுவதாவது,

"இவ்வாறு நவீன அறிவியலாளர்கள் எடுத்துரைக்கும் மனிதப் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டால், இன்றைய உலகின் இன வேறுபாடுகள் இற்றைக்கு 60,000 ஆண்டுகளுக்கு முன் காணப்படவில்லை.

அப்பொழுது கறுப்பர் என்றும் வெள்ளையர் என்றும் வேறுபடுத்தக்கூடிய வர்க்கங்கள் இருக்கவில்லை. தோல் நிறத்தாலும் தலைமுடியின் தன்மையாலும் கண் அமைப்பாலும் வேறுபடுகின்ற சீனர், ஐரோப்பியர் மற்றும் ஆபிரிக்கர் என்று பிரித்துக் காட்டக்கூடிய இனங்கள் இருக்கவில்லை.

இந்த உண்மையை ஏற்றுக் கொண்டால், பல்லாயிரம் ஆண்டுகளாக உலகில் மனித வர்க்கத்தினுள் ஏற்பட்டு வந்த மாற்றங்களும், கலப்பும், வெளியுலகக் காரணிகளும் செயற்பட்டு இன்றைய இனக் குழுக்கள் உருவாகுவதற்கு உதவின என்பதை விளங்கிக் கொள்ள முடியும்".

ஆதிமனிதர் தோற்றம் பற்றி வேறும் சில கருத்துக்கள் இருந்த போதிலும், அறிவியல் கண்ணோட்டத்தில் ஆய்வுகளை நடத்திய அறிஞர் பலர், ஆபிரிக்காவில் இருந்து தோற்றம் பெற்று இடம் பெயரத் தொடங்கிய ஆதிமனிதர் செங்கடலின் தென்பாகத்தைக் கடந்து, அரேபியாவின் தென்கரை வழியாக இந்தியாவின் தென்கரையை அடைந்து, அங்கிருந்து இந்தோனேஷியா வழியாக அவுஸ்திரேலியா வரை சென்றனர் என்றும் இப்பெயர்ச்சி 60,000 ஆண்டுகளுக்கு முன்னர்தான் தொடங்கியது என்றும் பொதுவாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மேற்கூறியவாறு ஏற்பட்ட இனப்பரம்பல், தென்னிந்தியா, இலங்கைப் பிரதேசங்களைப் பொறுத்த வரையில், ஒரு முக்கிய நிகழ்வாகக் காணப்படுகின்றது.

ஆபிரிக்காவில் இருந்து ஏற்பட்ட இவ் இனப்பரம்பல் இந்தியாவைப் பொறுத்தமட்டில் தென்னிந்தியாவில்தான் முதலில் ஏற்படுவதைப் பூகோள ரீதியாகப் பார்க்க முடிகின்றது. இதன்படி வட இந்தியப் பிரதேசங்களில் மனிதர் நடமாட்டம் ஏற்படுவதற்கு முன்னதாகவே தென்னிந்தியா, இலங்கைப் பிராந்தியத்தில் மனிதர் வாழத் தொடங்கியிருக்கின்றார்கள் என தெரிகிறது.

(தொடரும்)

# கும்பாபிஷேக மலர் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோவிலின் கும்பாபிஷேக மலராகிய முத்துக்குமரன் என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் ஆலயத்தில் இடம்பெற்றது. முத்துக்குமரன் நூலின் மலராசிரியர் சி.மதீசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வரவேற்புரையை ஆலய செயலாளர் சி.றஜீத், தொடக்கவுரையை ஆலயத் தலைவர் சி.சிவானந்தன், ஆசியுரைகளை வண. யோ.குருசாமிக் குருக்கள், வண.நா.பாலஸ்கந்த ரூபக் குருக்கள் ஆகியோர் ஆற்றினர்.

நிகழ்வில் வாழ்த்துரைகளை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகன், மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அ.லோகநாதன், சட்டத்தரணியும் முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய நா.சத்தியநாதன் ஆகியோர் ஆற்றினர். நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக கணக்கீட்டுத் துறைத் தலைவர் பேராசிரியர் சி.நிமலதாசன் ஆற்றினார். மதிப்பீட்டுரையை செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஆற்றினார். கோவில் வரலாற்றில் முதன் முதலாக வெளியீடு செய்யப்பட்ட நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உடுவில் லவ்லேன் வீதிப்புனரமைப்பு ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைக்குட்பட்ட உடுவில் லவ்லேன் வீதியானது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் நிதியொதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்பு நிதியொதுக்கீட்டின் கீழ் மேற்படி வீதியானது புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை லவ்லேன் பகுதி யில் இடம் பெற்றது.

இதில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கற்களைப் பரவி வீதி புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

மாகாணசபை உறுப்பினருடன் வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபையின் 14 ஆம் வட்டாரமான உடுவில் தெற்கு உறுப்பினர் அன்ரன் லீனஸ், 15 ஆம் வட்டாரமான உடுவில் தென்கிழக்கு உறுப்பினர் திருமதி சந்திரவதனி காந்தராசா மற்றும் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பூலாக்காடு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள நூறு ஏக்கர் தவனைக் கண்டம் என அழைக்கப்படும் வயல்வெளி பிரதேசத்தில் நேற்றுக் காலை ஆயுதங்கள் சிலவற்றை மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது எல்.எம்.ஜீ.-01. டி.56 வகை துப்பாக்கி 01 என்பன மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை குறித்த பிரதேசத்தில் வசிக்கும் காணி உரிமையாளரான சிவலிங்கம் என்பவர் தமது வயலில் வரப்பு கட்டும் பணிகளை மேற்கொண்ட போது மர்மப் பொருள் ஒன்று தெரிவதனை அறிந்து வாழைச்சேனை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் நேற்றுக் காலை குறித்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளது என அறிந்து அவற்றினை மீட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# புகையிரதத்தில் மோதுண்ட 18 வயது மாணவி மரணம்

(கொழும்பு)

அளுத்கமவிலிருந்து காலி நோக்கிப் பயணித்த புகையிரதத்துடன் மோதுண்டு 18 வயது மாணவியொருவர் உயிரிழந்துள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவமானது நேற்று முன்தினம் பிற்பகல் 2.15 மணியளவில் அம்பலாங்கொடை புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் இடம்பெற்றுள்ளது.

புகையிரதத்துடன் மோதுண்டு பலத்த காயங்களுக்குள்ளான துலராணி அமன்தா என்ற மாணவியை பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1480

### முரளி

என்று உடல் உழைப்பு குறைந்து போனதோ...



அப்போதே வைத்தியசாலைகள் அதிகமாகத் தொடங்கி விட்டன...!

### முகேஷ்

யாரும் வெறுக்காத அளவுக்கு நம் வாழ்க்கை இருந்தால்



யாரும் மறக்காத அளவுக்கு நம் மரணம் இருக்கும்

### முஸ்தபா

வாழ்க்கையின் கடைசிவரை போராடவேண்டும் என்ற எளிய தத்துவத்தை நமக்குச் சொல்லித் தருகிறது காலியாகப் போகிற இந்த பேஸ்ட்...



என்ன அமுக்கு அமுக்க வேண்டியிருக்கு!

### முகுந்தன்



நூறு பேரின் வாயைமூட முயற்சிப்பதை விட தன் காதுகளை மூடிக்கொள்வது சிறந்தது

### முருகன்

ஒரு பெரியவர் என்னைப் பார்த்து வீரமும் விவேகமும் இளைஞன் கிட்ட கண்டிப்பா இருக்கனும்னு சொன்னாரு...



நான் இரண்டு படத்தையும் டவுன்லோட் பண்ணிட்டேன்

### முகிலன்

முடிவே இல்லாத வாழ்வும் இல்லை



பிரிவே இல்லாத உறவும் இல்லை...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நல்லாட்சி அரசை வெற்றிபெறச் செய்த மூன்றாவது சிறுபான்மைச் சமூகத்தை தோல்வியடையச் செய்ய முனையக்கூடாது

## அரசிற்கு கிழக்கு முன்னாள் முதலமைச்சர் இடித்துரைப்பு



(ஏறாவூர்)

நல்லாட்சி அரசை வெற்றி பெறச் செய்தவர்களில் மூன்றாவது சிறுபான்மைச் சமூகத்தின் பங்கு அளப்பரியதாக இருந்தது என்பதை உணராத நிலையில் நல்லாட்சி அரசு தற்போது நகர்வது கவலையளிப்பதாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமத் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசின் கலப்புத் தேர்தல் முறை தொடர்பாக நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நம்பிக்கையற்று குழப்பங்களோடு இருந்த சிறுபான்மையினர் அந்தக் குழப்பகரமான அரசை மாற்றி நல்லாட்சி அரசை ஆட்சிபீட மேற்றினர்.

இதில் மூன்றாவது சிறுபான்மையினரான முஸ்லிம்களின் வகிபாகம் பெரிதாக இருந்தது.

ஆனால், நல்லாட்சி அரசின் தற்போதைய போக்கு அந்த மூன்றாவது சிறுபான்மையினரான முஸ்லிம்களைத் தோற்கடிப்பாக அமைந்திருக்கிறது.

நல்லாட்சி அரசு கலப்புத் தேர்தல் முறையை அமுல்படுத்துவதன் மூலம் நாட்டின் மூன்றாவது சிறுபான்மையான முஸ்லிம் சமூகத்தை அரசியல் பிரதிநிதித்துவம் அற்றவர்களாக்குவதோடு அவர்களது இன்னபிற அரசியல் உரிமைகளையும் இல்லாதொழிப்பதாகவே அமைந்து விடும்.

இதுவொரு ஜனநாயக மறுப்பாகவும் நல்லாட்சியின் கொள்கை விரோதச் செயற்பாடாகவும் கருதிக் கொள்ளவும் வழியேற்பட்டுள்ளது. கலப்புத் தேர்தல் முறையை மீண்டும் கொண்டு வருவது மாகாண சபையிலும், நாடாளுமன்றத் தேர்லில் முஸ்லிம் சமூக பிரதிநிதித்துவத்தை மிக மோசமாகக் குறைக்கக் கூடிய சாத்தியமுள்ளது.

மேலும், கலப்புத் தேர்தல் முறையை முதன் முதலாக கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது அமுல்படுத்திப் பார்த்த அனுபவத்தின் மூலம் அது இந்த பல்லின சமூக நாட்டுக்கு நடைமுறையில் பொருந்தாது என்பதைக் கண்டுள்ளது இந்த நல்லாட்சி அரசு.

கலப்புத் தேர்தல் முறையால் எந்தவொரு உள்ளூராட்சி மன்றமும் ஸ்திரமாக இல்லை என்பதைக் கண்டுணர்ந்து வருகின்றோம். அங்கு நிர்வாகம் சுமுகமாக இடம்பெறவில்லை.


ஆகவே, இந்த கலப்பு முறைத் தேர்தல் மாகாண சபைகளுக்கும் நாடாளுமன்றத்திற்கும் அமுல்படுத்தப்படுமாக இருந்தால் இதே மாதிரியான தொங்கு இழுபறி நிலையே நிர்வாகத்தில் ஏற்படும். அதனால் மக்கள் நம்பிக்கை இழப்பார்கள்.

பழைய தேர்தல் முறை மாத்திரமே சிறுபான்மைச் சமூகங்கள் மற்றும் சிறு கட்சிகளின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தக் கூடியது.

இந்த முழு நாடும் நம்பிக்கையை இழப்பதற்கு முன்பதாக நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை மீண்டும் கொண்டுவரக் கூடியதாக நல்லாட்சி நல்ல அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தொடர்ந்தும் தேர்தலைப் பிற்போடுவது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல

## ஆனந்த தேரர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தொடர்ந்து தேர்தலை பிற்போடுவது நாட்டின் ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல என நாரம்பனாவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

வாக்களிக்கும் உரிமையை கட்டாயம் மக்களுக்கு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜி.எல் பீரிஸ் அஸ்கிரிய விகாரைக்குச் சென்றபோதே நாரம்பனாவே ஆனந்த தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## "நல்ல மனிதனை இழந்து விடக்கூடாது"

# இராதாவைப் புகழ்ந்தார் முத்து

(கொழும்பு)

கல்வி இராஜாங்க அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணனுக்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற கௌரவிப்பு விழாவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கம் கலந்துகொண்டார்.

இராஜாங்க அமைச்சரின் 66 ஆவது பிறந்த தினத்தையும் மலையகத்தில் 30 வருட அரசியல் சேவையையும்தொடர்ந்து22வருடகல்விச் சேவையையும் லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றமையையும் நினைவு கூர்ந்தே ஹற்றன் டீ.கே.டபிள்யூ மண்டபத்தில் நேற்று முன்தினம் இந்தக் கௌரவிப்பு விழா நடத்தப்பட்டது.

அந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம், "கல்வி இராஜாங்க அமைச்சராக இருக்கின்ற வேலுசாமி இராதாகிருஷ்ணன், என்றுமே எனது நல்ல நண்பர். அவரைப் போன்றதொரு நல்ல மனிதனை நாம் இழந்துவிடக் கூடாது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து, ஜெனிவாவில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் பங்கேற்பதற்காக நான் சென்றேன். இதன்போது விமான நிலையத்தில் வைத்து என்னை இராதாகிருஷ்ணனே வழியனுப்பி வைத்தார். கலந்துரையாடலை நிறைவுசெய்து கொண்டு நாட்டுக்குத் திரும்பியபோது என்னை வரவேற்பதற்கு அவர் வரவில்லை.

"அவர், மற்றோர் இடத்துக்குச் சென்றுவிட்டார். என்னைப் பொறுத்தவரையில் அது தவறில்லை. ஏனெனில், அது அவருடைய தனிமனித சுதந்திரமாகும்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வு தொடர்பாக அழைப்பு விடுக்கப்பட்டதும் அது தொடர்பாக இ.தொ.காவின் தலைவரும் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமானிடம் தெரியப்படுத்திய போது, இராதாகிருஷ்ணனின் பெயரைக் கேட்டதும் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கும் வாழ்த்துகளைத் தெரிவிப்பதற்கும் அவர் சம்மதம் வழங்கினார் என பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன், தன்னை ஒரு சாதாரண மனிதராகவும் சிறந்த ஒரு தலைவராகவும் பார்த்ததாக பெருமை பாராட்டிய பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம், தானும் அவரை அப்படியே பார்த்ததாகவும் தங்களிடத்தில் எப்போதும் எவ்விதமான பாகுபாடும் இருந்ததில்லை என்றும் கடந்த காலத்தை ஞாபகமூட்டினார்.

மலையகத்தைப் பொறுத்தவரையிலும் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், நுவரெலியா மாவட்டத்தில் கோட்லோஜ் தோட்டத்துக்கு தன்னுடைய சொந்தப் பணத்தில் மக்களுக்கு மின்சார இணைப்பைப் பெற்றுக்கொடுத்தவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதாகக் கூறிய அவர்,

"மலையக மக்களுடைய ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்ப்பதற்கு தயங்காது, கோபப்படாமல் சிரித்த முகத்தோடு முன்னின்று மக்களுக்குச்சேவை செய்து கொண்டிருக்கின்ற ஒரு மகான் வேலுசாமி இராதகிருஷ்ணன்" என்றும் அவர் பெருமை பாராட்டினார். (இ-7)

# செய்தித்துளிகள்

## கடலில் மூழ்கிய நால்வரை காப்பாற்றிய பொலிஸார்

(நிலாவெளி)

நிலாவெளி கடற்கரையில் நீராட சென்றிருந்த வேளை அலையில் இழுத்துச் செல்லப்பட்டிருந்த நான்கு பேரை உப்புவெளி பொலிஸார் உயிர் பாதுகாப்பு அதிகாரிகள் காப்பாற்றியுள்ளனர். உறவினர்களுடன் சுற்றுலா சென்றிருந்த இவர்கள் வவுனியா பகுதியை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (இ-7)

## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதி காலை விசேட அபிஷேகமும் பூசைகளும் காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின் பொதுமக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ

## கோட்டை மெலிபன் வீதியில் வர்த்தக நிலையத்தில் தீ

(கொழும்பு)

கொழும்பு -கோட்டை மெலிபன் வீதி பகுதியில் நேற்று அதிகாலை வர்த்தக நிலையம் ஒன்றில் தீப்பரவல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்று அதிகாலை 5 மணியளவில், பைகள் (பேக்) விற்பனை நிலையம் ஒன்றிலேயே இந்த தீப்பரவல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு மாநகர சபையின் 3 தீயணைப்பு வாகனங்கள் குறித்த பகுதிக்குச் சென்று தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் இந்தத் தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. (இ-7)

## தளபாடங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.குருசோ வீதியில் அமைந்துள்ள கிறீன்பீல்ட் சன சமூக நிலையத்திற்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் கே.சயந்தனால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் அண்மையில் சனசமூக நிலையத்தின் தலைவர் கீதபொன்கலனிடம் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட் கலந்து கொண்டார். (இ

## சுவாசிப்பதில் சிக்கல் முதியவர் மரணம்

(சாவகச்சேரி)

கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை மாலை சுவாசிப்பதில் சிக்கல் ஏற்பட்டதன் காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட முதியவர் ஒருவர் சிறிது நேரத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். பூநகரியைச் சேர்ந்த 76வயதான இளையதம்பி தங்கமயில் என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-30)




# குதிரைக்கால் சூப்

பசியோடு அலைந்த நரிக்கு ஒரு பெரிய மாமிசத் துண்டு கிடைத்தது. உடனே அதை எடுத்துக்கொண்டு குகைக்கு ஓடிவந்தது. குளித்துவிட்டுச் சாப்பிடலாம் என்று நீரோடைக்குச் சென்றது. எண்ணமெல்லாம் அந்த மாமிசத் துண்டிலேயே இருந்ததால், அவசரமாக ஓடிவந்தது.

குகை வாசலில் ஓநாய் மாமிசத் துண்டோடு நின்றிருந்ததைக் கண்டதும் நரிக்கு ஏமாற்றமாகிவிட்டது.

"என் குகைக்குள் வந்து அனுமதியின்றி இறைச்சியை எடுத்தால் அதற்குப் பெயர் திருட்டு" என்று கோபமாகக் கூறியது நரி.

ஓநாய் பதில் சொல்லாமல் அமைதியாக நின்றது.

"இது மிகவும் மோசமான குணம். என்னிடம் கேட்டிருந்தால் நானே கொடுத்திருப்பேன். எப்போதுமே இரையைப் பிடித்தால் பலருக்கும் கொடுத்துவிட்டே உண்பது என் வழக்கம்.

இன்று இரை குறைவாகக் கிடைத்ததாலும் எனக்குப் பசி அதிகமாக இருந்ததாலும் நானே சாப்பிட முடிவெடுத்து, குகைக்குக் கொண்டு வந்துவிட்டேன். எவ்வளவு சுயநலமாக நினைத்துவிட்டேன்.

நல்ல வேளை நீவந்து உணவை எடுத்துக் கொண்டாய். சாப்பிட்டுவிட்டுச் செல்" என்றது நரி, தன்னுடைய ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு.



ஓநாயும் மகிழ்ச்சியாக இறைச்சி முழுவதையும் தின்றுவிட்டு, "மிகவும் நன்றி நரி. உன்னைப்போல் ஒருவனை நான் பார்த்ததில்லை" என்று சிரித்தது.

"நல்ல உணவு கிடைத்தால் உனக்குச் சொல்லி அனுப்புகிறேன். கண்டிப்பாக வர வேண்டும்" என்று நரி சொன்னதும் ஓநாயின் முகம் மலர்ந்தது.

"அன்பாகக் கூப்பிடும்போது வராமல் இருப்பேனா? நிச்சயம் வருகிறேன்" என்று ஓடிச் சென்றது ஓநாய்.

ஒரு மரத்தடியில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தது நரி.

"நரியே, அப்படிஎன்ன யோசனை? நான் வந்ததைக் கூட நீ அறியவில்லை" என்று குதிரை சொன்னவுடன் நிமிர்ந்து பார்த்தது நரி.

"உன்னைப் பார்த்தவுடன் ஒரு யோசனை தோன்றுகிறது. இந்தப் பொல்லாத ஓநாய் எல்லோரின் உணவையும் திருடிச் சாப்பிடுகிறான். என்னை விடப் பலம் வாய்ந்தவன் என்பதால் அவனை எதிர்க்க முடியவில்லை. உன் உதவி இருந்தால் அவனுக்கு ஒரு முடிவு கட்டலாம்" என்றது நரி. "உனக்குச்செய்யாமலா? என்ன உதவி?"

நரி தன் திட்டத்தை விபரித்தது. குதிரையும் அதற்கு ஒப்புக்கொண்டது.

மறுநாள் ஓநாயை அழைத்தது நரி. "உணவு ஏதாவது கிடைத்துவிட்டதா?"

"ஆமாம் அதற்காகத்தான் உன்னை அழைத்தேன். குதிரையின் காலில் இருந்து மிகச் சுவையான சூப்பைப் பருகிவிட்டு இப்போதுதான் வருகிறேன். நீயும் வருகிறாயா?" என்று கேட்டது நரி.

"என்னது? குதிரையின் காலில் இருந்து சூப்பா? குதிரைக்கால் சூப் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனாலும் நீ சொல்லும்போது என்னால் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. சரி, வா போகலாம். நானும் அந்தக் குதிரைக்கால் சூப்பைப் பருகிப் பார்க்கிறேன்" என்றது ஓநாய்.

இருவரும் பேசிக்கொண்டே குதிரை இருக்கும் இடத்துக்குச் சென்றனர்.

"குதிரையே, நீ கொடுத்த குதிரைக்கால் சூப் பிரமாதம் என்று என் நண்பனிடம் சொன்னேன். அவனுக்கும் அதைப் பருக வேண்டும் என்று ஆர்வம் வந்துவிட்டது. எனக்குக் கொடுத்ததுபோல் என் நண்பன் ஓநாய்க்கும் சூப் கொடுக்க முடியுமா?" என்று கேட்டது நரி.

"எனக்கும் இந்த ஓநாய்க்கும் எப்போதும் ஒத்து வராது. ஆனால் நீ என் நண்பன் என்பதால், இவனுக்கும் சூப் கொடுக்கச் சம்மதிக்கிறேன். இப்போதுதான் சிறுத்தை சூப் சாப்பிட்டுவிட்டுச் சென்றது.

சற்று நேரம் காத்திருந்தால் சூடான சூப்பைத் தருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஒரு பெரிய மரத்துக்குப் பின்னால் சென்றது குதிரை.

"சுவையான சூப் என்றால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயார்" என்று நாவில் நீர் வடியக் காத்திருந்தது ஓநாய்.

மரத்துக்குப் பின்னால் சென்ற குதிரை கால்களை நன்றாக உதறி, உடற்பயிற்சி செய்தது. பிறகு ஓநாய் அருகில் வந்தது.

"என் கால்குளம்பில் உன் வாயை வைத்து உறிஞ்சினால்தான் சூப் கிடைக்கும். நான் சொல்லும்வரை வாயை எடுக்கக் கூடாது. புரிகிறதா?" என்று கேட்டது குதிரை.

"சுவையான சூப் கிடைக்கும் என்றால் என்ன சொன்னாலும் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே குதிரையின் பின்னங்காலுக்கு அருகில் வந்தது ஓநாய்.

அடுத்த நொடி நரி தலையாட்ட, குதிரை ஓங்கி ஓர் உதை விட்டது. தொலைவில்போய் விழுந்தது ஓநாய். பல் உடைந்து, வாய் வீங்கிவிட்டது.

"திருடித் தின்ற வாய்க்குத் தக்க தண்டனை. இப்படி ஒரு தண்டனை வழங்குவதில் எனக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை.

ஆனால் நீ பலரின் உழைப்பையும் திருடியிருக்கிறாய். எவ்வளவு சொல்லியும் திருந்தாததால் தான் நான் இப்படி ஒரு திட்டத்தைத் தீட்டினேன். இனியாவது உழைத்துச் சாப்பிடு" என்று சொல்லிவிட்டுக் கிளம்பியது நரி.

## பொன்மொழிகள்

☆ பக்தியோடு பிரார்த்தனை செய். ஆனால் சுத்தியலை பலமாக அடி- இங்கிலாந்து
☆ உன் அயலானை நேசி, ஆனால் வேலியை எடுத்து விடாதே -டென்மார்க்
☆ அதிர்ஷ்டசாலிக்குச் சேவல் கூட முட்டையிடும் - கிரீஸ்
☆ நல்ல மனசாட்சி கடவுளின் குரல் - எஸ்தோனியா
☆ ஒரு நல்ல நண்பன் நூறு இனத்தார்க்குச் சமம் - பிரான்ஸ்
☆ நரி உபதேசம் பண்ணத் தொடங்கினால், உன் கோழிகளைக் கவனி - அல்பேனியா
☆ அறிவு தலைக்கு கிரீடம், அடக்கம் காலுக்குச் செருப்பு - ஹீப்ரு
☆ தேவையில்லாததை நீ வாங்கினால் தேவையானதை நீவிற்று விடுவாய்- கிளாரண்டன்
☆ ஒழுக்கம் என்பது வெள்ளைக்காகிதம் போன்றது. ஒரு முறை கறை பட்டால் மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டு வர முடியாது - ஹாவ்ஸ்
☆ அதிர்ஷ்டத்தை என்றும் நம்பாதே... அது உன்னை சோம்பேறியாக்கும் - ஆதிசங்கரர்
☆ ஆற்றலைக் காட்டிலும் ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் காரணம் - ஒயிட்
☆ அளவில்லாத ஆசை, நமது நல்ல குணங்களை அழித்து விடும்-மகாவீரர்
☆ நீ துயரப்படக் காரணம் எதுவாக இருந்தாலும் பிறருக்குத் துன்பம் செய்யாதே-ஜார்ஜ் எலியட்
☆ அறிவின்மை கேவலம். அதைவிடக் கேவலம் அறிய மனமில்லாமை - செஸ்டர்பீல்டு
☆ மௌனம் என்ற மரத்தில் அமைதி எனும் கனி தொங்கும் - பாஸ்கல்

## பழமொழிகள்-கல்வி

⅄ ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒருவித உபயோகமும் கிடையாது!
☞ காந்திஜி

⅄ இளமையில் கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன் எதிர்கால வாழ்விலும் இறந்தவன்!
☞ யூரிபிடிஸ்

⅄ கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமைதான் தீவினையின் மூலவேர்!
☞ பிளேட்டோ

⅄ கல்வி ஒரு மூட்டை நூல்களை வாசிப்பது அன்று. அடக்கம், ஒழுங்கு, அறம், நீதி இவற்றின் முன்மாதிரியாகும்!
☞ எட்மண்ட்பர்க்

⅄ கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதல்ல. ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும்!
☞ ரஸ்கின்




❖ கி.மு 322 - மகா அலெக்சாண்டர் இறந்ததைத் தொடர்ந்து ஏதென்ஸ்க்கும் மக்கெடோனியர்களுக்கும் இடையில் "கிரான்னன்" என்ற இடத்தில் போர் இடம்பெற்றது.
❖ 1819 - கொலம்பியாவின் "பொயாக்கா" என்ற இடத்தில் ஸ்பானியர்களுக்கு எதிரான போரில் சிமோன் பொலிவார் பெரு வெற்றி பெற்றான்.
❖ 1832 - இலங்கையில் சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது.
❖ 1898 - யாழ்ப்பாணம் மானிப்பாயில் டாக்டர் ஸ்கொட் தலைமையில் மானிப்பாய் வைத்தியசாலை புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
❖ 1906 - கொல்கத்தாவில் வங்காளப் பிரிவினை எதிர்ப்புப் போராட்டத்தின் போது முதல் இந்திய தேசியக் கொடி உருவாக்கப்பட்டு பார்சி பகான் சதுக்கத்தில் ஏற்றப்பட்டது.
❖ 1944 - திட்டப்படுத்தப்பட்ட முதலாவது கணிப்பானை (ஹார்வார்ட் மார்க் ஐ) ஐ.பி.எம். நிறுவனம் வெளியிட்டது.
❖ 2006 - இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் உறுப்பினர் சிவப்பிரகாசம் மரியதாஸ் என்பவர் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

❖ 1642 - உமறுப் புலவர், சீறாப்புராணம்-முகமது நபியின் வரலாறு
❖ 1912 - பி. எல். பட்நகர், இந்தியக் கணிதவியலாளர் (இ. 1976)
❖ 1925 - மான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதன், இந்திய உயிரியலாளர்
❖ 1950 - சி.தண்டாயுதபாணி, இலங்கை அரசியல்வாதி
❖ 1950 - ஒசி அபேகுணசேகரா, இலங்கை அரசியல்வாதி (இ. 1994)
❖ 1966 - ஜிம்மி வேல்ஸ், விக்கிப்பீடியா நிறுவுநர்

### இறப்புகள்

❖ 1941 - இரவீந்திரநாத் தாகூர், நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞர் (பி. 1861)
❖ 1974 - வாணிதாசன், புதுவைத் தமிழறிஞர், கவிஞர் (பி. 1915)
❖ 1996 - மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி, இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டவர் (பி. 1977)
❖ 2013 - ச.சபாநாயகம், ஈழத்து மரபுவழி ஓவியர்
❖ 2014 - சுருளி மனோகர், தென்னிந்திய நகைச் சுவை நடிகர்

### சிறப்பு நாள்

❖ இளைஞர் தினம் (கிரிபட்டி)
❖ குடியரசு நாள் (கோட்டிவார்)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 60 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 78 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 180 | 250 | 200 | 300 | 250 |
| தக்காளி | 100 | 100 | — | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 160 | 140 | 150 | 90 | 160 | 100 |
| கரட் | 280 | 320 | 240 | 180 | 300 | 350 |
| பூசணி | 80 | 80 | 70 | 40 | 80 | 100 |
| புடோல் | 60 | 70 | 80 | 40 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 110 | 60 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 130 | 120 | 120 | 100 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 110 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 140 | 160 | 180 | 160 | 250 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 80 | 120 | 140 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 | 50 | 80 | 50 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 90 | 120 | 150 |
| பீற்றூட் | 150 | 110 | 100 | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 300• | 240 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 | 60 | 80 | 30-50 |
| போஞ்சி | 200 | 240 | 200 | 220 | 240 | 300 |
| கத்தரிதும்புள்ள | 60 | 70 | — | 40 | 80 | 50 |
| கீரை-1பிடி | 20 | 10 | 30 | 30 | 20 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 40 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 45 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 140 | 120 | 80 | 200 | 100 |
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 40 | 120 | 60 | 30 |

தோல்வியைக் கண்டு துவளாதீர்கள். துணிவை மேலும் பெருக்கிக் கொள்ள தரப்பட்ட வாய்ப்பே தோல்வி.
*– ஹென்றிச் ஃபோர்க்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வெளிநாட்டில் இருந்து வரும் எம் புலம்பெயர் உறவுகளுக்கு!

*தமிழ்ப் பற்று மிகுந்த முதியவர் ஒருவர் புலம்பெயர் உறவுகளுக்கு கடிதம் எழுதினால் எப்படியிருக்கும் என்று சிந்தித்தோம். அதன் வழி முதியவர் ஒருவரின் கடிதமாக இது அமைகின்றது.*

வெளிநாடுகளில் இருந்து வடபுலத்துக்கு வருகின்ற எங்கள் புலம்பெயர் உறவுகளுக்கு அன்பு வணக்கம்.

நீங்கள் உங்கள் குடும்பத்துடன் தாயகம் வந்திருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சி.

ஊரையும் உறவையும் மறக்காமல் பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் என்பதுபோல நீங்கள் இங்கு வந்திருப்பதால் மனம் நிறைவடைகிறது.

எனினும் ஒரு கவலை உங்களைப் போல் உங்கள் பிள்ளைகளும் தாயகத்து மண்ணையும் உறவையும் நினைந்து வந்து போவார்களோ என்ற ஏக்கம்தான் அந்தக் கவலைக்குக் காரணம்.

உலக நாடுகள் முழுமையிலும் தமிழர்கள் வாழ்வது எமக்குப் பலமும் பெருமையுமாகும். ஒரு காலத்தில் இந்த உலகில் இருக்கக்கூடிய முதன்மை நாடுகளில் ஈழத்தமிழனின் வாரிசுகள்தான் அந்த நாடுகளின் ஆட்சிப் பீடங்களில் இருப்பர். இது சத்தியவாக்கு.

உள்நாட்டில் எங்கள் விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்டாலும் என்றோ ஒருநாள் ஈழத் தமிழன் தன் உரிமைக்காக உலகம் முழுமையிலும் இருந்து கொண்டு குரல் கொடுப்பான்.

அப்போது வல்லரசுகள் அதற்கு மதிப்புக் கொடுக்கும். இது நிச்சயம் நடக்கும். இதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் அந்த இறைவன் செய்து வருகிறான்.

அதற்கான அறிகுறிகளாக உலக நாடுகளில் நம் உறவுகள் ஆட்சிப் பீடங்களிலும் அறிவியல்துறைகளிலும் பொருளாதார மையங்களிலும் கோலோச்சத் தலைப்பட்டுள்ளனர்.

இதுதான் எங்களுக்கு இறைவன் தர இருக்கின்ற கொடையின் அருட்குறி.

இருந்தும் நம் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் தமிழர்களாக வாழ வேண்டும். அது மட்டுமல்ல; தங்கள் பிள்ளைகளுக்கு தாய்மொழியாம் தமிழைக் கற்றுக் கொடுத்து தாயகத்தின் மீதான பற்றுறுதியை கட்டிக் காக்க வேண்டும்.

அப்போதுதான் யாம் மேற்கூறிய இறைவனின் கொடை மிக எளிமையாக நடந்தேறும்.

ஆக, எமதருமை புலம்பெயர் உறவுகளே! நீங்கள் நினைத்தால்தான் ஈழத் தமிழினம் வாழ முடியும். தலைநிமிர முடியும். இதற்காக நீங்கள் செய்ய வேண்டிய அத்தனை பணிகளையும் செய்கிறீர்கள்.

ஆனாலும் அந்தப் பணி உங்களோடு மட்டும் நின்று விடாமல், தலைமுறை தலைமுறையாகத் தொடரட்டும்.

இதற்காக நீங்கள் அத்தனைபேரும் உங்கள் பிள்ளைகளுக்கு தமிழையும் தமிழ் உணர்வையும் கற்றுக் கொடுங்கள். அதுபோதும்.

வேறு என்ன மக்காள்; இப்ப வடபுலத்தில் வாகன விபத்து அதிகம். நீங்கள் வாழுகின்ற நாட்டு நடைமுறையில் இங்கு வாகனங்கள் ஓடுகின்றன என்று நினைத்து விடாதீர்கள்.

கவனம் மக்காள். பயணத்தின்போது வேகத்தைக் கட்டுப்படுத்தும்படி கூறுங்கள். அதற்கு மேலாக சாரதி நித்திரை கொண்டு விடுவார். அதையும் பார்த்துக் கொள்ளுங்கள்.

வருகின்ற 16ஆம் திகதி நல்லூர்க் கந்தப் பெருமானின் கொடியேற்றம். ஒருக்கால் அவனிட்ட போய் வாருங்கள். சுகமாக இருந்தால் மீண்டும் கடிதம் எழுதுகிறேன்.

# சட்டவிரோத புதிய அரசியலமைப்பால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்டு வரும் புதிய அரசியலமைப்பால் நாட்டுக்கு பெரும் ஆபத்து ஏற்படப் போவதாகவும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன எச்சரித்துள்ளது.

கொழும்பு - நெளும் மாவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமைக் காரியாலயத்தில நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அக்கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

மேலும், புதிய அரசியலமைப்பு தொடர்பில் தமக்கு இரகசியமான ஆவணம் ஒன்று கிடைத்திருப்பதாகவும் பீரிஸ் தெரிவித்தார். (இ-7)

## தேசிக்காய்க்கு ஆசைப்பட்டு மோ.சைக்கிளை இழந்த நபர்

(கரணவாய்)

தேசிக்காய்க்கு ஆசைப்பட்டு மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான மோட்டார் சைக்கிளை ஒருவர் கைவிட்டு தப்பிச்சென்ற சம்பவம் வடமராட்சிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிறுக்கிழமை மாலை வதிரி இரும்பு மதவடிப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

மேற்படி பகுதியிலுள்ள காணி ஒன்றில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் தேசிக்காய்களை பிடுங்கியுள்ளார்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸார் அப்பகுதிக்கு சென்ற போது தேசிக்காய்களை பிடுங்கியவர் தனது பெறுமதியான மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற நெலலியடி பொலிஸார் மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

தற்போது தேசிக்காயின் விலை கிலோ ஒன்று இருபது ரூபாய் தொடக்கம் முப்பது ரூபாய் வரையில் (சந்தை நிலைவரம்) காணப்படும் நிலையில் அதனைப் பிடுங்கச் சென்றவர் மோட்டார் சைக்கிளை கைவிட்டு சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

## ரயில் விபத்து 25 பேர் காயம்

(கொழும்பு)

பொல்காவலை ரயில் நிலையத்தின் பனலிய பிரதேசத்திற்கு அருகில் இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த ரயில் ஒன்று, இயந்திர கோளாறு காரணமாக பொல்காவலை ரயில் நிலையத்திற்கு அருகில் நிறுத்தப் பட்டுள்ளது.

இதன் பின்னர் மாலை 4.50 மணியளவில் கொழும்பில் இருந்து ரம்புக்கனை நோக்கி பயணித்த மற்றுமொரு ரயிலானது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலுடன் மோதியது.

குறித்த விபத்தில் காயமடைந்த 25 பேர் தற்போது பொல்காவலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## உத்தியோகத்தரின் மறைவுக்கு அனுதாபம் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன

(கரணவாய்)

உத்தியோகத்தரின் திடீர் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் ஏ9 வீதியில் இயக்கச்சி பகுதியில் மின்சாரக் கம்பங்களை ஏற்றியநிலையில் தரித்து நின்ற கனரக வாகனத்துடன் ஹயஸ் வான் மோதி விபத்திற்குள்ளானது.

இதில் பலியானவர்களில் இமானுவேல் மேரிலூயிஸ் அன்ரனிஸ் (வயது-40) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை அரச உத்தியோகத்தராவார்.

அவர் பருத்தித்துறை பிரதேசசபையில் கடமையாற்றியதுடன் மூன்று மாதங்களிற்கு முன்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அபிவிருத்தி உத்தியோகத்தராக இடமாற்றலாயிருந்தார்.

அவரின் திடீர் மரணத்திற்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வைத்தியசாலையில் கறுப்புக் கொடிகள் நேற்று திங்கட்கிழமை பறக்கவிடப்பட்டிருந்தன. (இ-60)

## பொலித்தீன் பைகளுக்கு பதிலாக கடதாசிப் பைகள்

பல்பொருள் அங்காடிகள் மற்றும் பிரதான ஆடை உற்பத்தி நிலையங்களின் பொருட்கள் விற்பனையின் போது, பயன்படுத்தக்கூடிய பொலித்தீன் பைகளுக்கு பதிலாக மாற்றுப் பைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் வர்த்தகர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

விசேடமாக கடதாசியிலான பைகளைப் பயன்படுத்துவது குறித்து மத்திய சுற்றாடல் அதிகார சபை அவதானம் செலுத்தியுள்ளதுடன், இதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் ஜே.எம்.வி. இந்திரரத்ன தெரிவித்தார்.

தேசிய அருங்கலைகள் சபையுடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## பனை அபிவிருத்தி சபையின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழில் பல்வேறு நிகழ்வுகள்

பனை அபிவிருத்தி சபையின் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

பனை அபிவிருத்தி சபை ஆரம்பித்து இன்றுடன் 40 ஆவது ஆண்டு பூர்த்தியாகிறது.

இந்த நிறைவு நாளை முன்னிட்டு இன்று நண்பகல் நல்லூரில் கற்பகம் சிறப்பு அங்காடி திறப்புவிழா இடம் பெறவுள்ளது.

அதனை தொடர்ந்து இன்று பிற்பகல் 2 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் 40ஆவதுஆண்டுநிறைவு விழா நிகழ்வு நடைபெறவுள்ளது. அதில் பனை அபிவிருத்தி சபையின் முன்னைநாள் தலைவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன், பனை உற்பத்தி சங்கங்களுக்கான பதிவுச்சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

மேலும் பனை அபிவிருத்தி சபையால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் இனி வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக சிறப்பு கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது. (ம-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ❖ சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு "எதிர்ப்பது" என்றே பொருள்.
- ❖ ஒரு நல்ல லட்சியத்தை ஏற்றுக்கொண்டு, அதை அடைவதற்காக தைரியத்துடன் போராடும் வெற்றி வீரனாகத் திகழுங்கள்.
- ❖ நாம் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள். எதையும் சாதிக்கக் கூடிய வலிமை நமக்குள் இருக்கிறது.
- ❖ நல்லவழியில் செல்வத்தைத் தேடுவதும், அதை பிறருக்கு உதவும் வகையில் செலவழிப்பதும் மட்டுமே கடவுளுக்குரிய வழிபாடு.
- ❖ உடல் உறுப்புகள் துருப்பிடித்துத் தேய்ந்து போவதை விட, உழைத்துத் தேய்வது மேலானது.
- ❖ உலகம் ஏளனம் செய்வதை பொருட்படுத்த வேண்டாம். லட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருங்கள்.
- ❖ மற்றவை எல்லாம் மரணத்தோடு நம்மை விட்டு நீங்கிவிடும். ஆனால், நல்லொழுக்கம் மறுபிறவியிலும் நம்மைத் தொடர்ந்து வரும்.
- ❖ செயலின் பயனில் மட்டும் கருத்தைச் செலுத்தாமல் செய்யும் முறையிலும் கவனம் வைப்பது அவசியம்.

# தடையின்றித் தொடரும் ரில்கோவின் வெற்றி



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 8 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

லீக் சுற்றின் 45 ஆவது போட்டியில் ரில்கோ கொங்கியூறஸ் அணியை எதிர்த்து நொர்தேன் எலைட் அணி மோதியது.

போட்டியின் 9 ஆவது நிமிடத்தில் நொதேன் எலைட் அணியின். ஜெ.ஏ.றொகின்ஸன் முதலாவது கோலை அடித்தார்.

அதன்பிறகு ரில்கோ அணியின் வேகம் அதிகரித்தது. 27 நிமிடத்தில் அவ் வணியின் வை.எஸ்.ஜிஎப் மோமஸ், 36 ஆவது நிமி டத்தில் ஜெ.சுபிதன், 68 மற்றும் 80 ஆவது நிமிடங்களில் மோமஸ் இரண்டு கோல்களைப் பதிவு செய்தார். 83 ஆவது நிமிடத்தில் நொதேன் எலைட் அணியின் ஜெ.ஏ.றொகின்ஸன் இரண்டாவது கோலை அடித்தார். முடிவில் ரில்கோ கொங்கியூறஸ் அணி. 04:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

# தமிழ் யுனைட்டட் அணி வெற்றி



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 8 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. லீக் சுற்றின் 47 ஆவது போட்டியில் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து தமிழ் யுனைட்டட் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் எவ் வித கோல்களையும் போடவில்லை. அதன் பிறகு போட்டியில் தமிழ் யுனைட்டட் அணியின் ஆதிக்கமே மேலோங்கியது. 48 ஆவது நிமிடத்தில் யுனைட்டட் அணியின் எம்.நிதர்சன் முதலாவது கோலை அடித்தார். 63 ஆவது நிமிடத்தில் வி.விக்னேஸ் கோல் அடித்தார். 80 ஆவது நிமிடத்தில் எம்.நிதர்சன் தனது இரண்டாவது கோலை அடித்தார். 90 ஆவது நிமிடத்தில் எம்.அப்துலை கோல் ஒன்றை அடித்தார்.

முடிவில் தமிழ் யுனைட்டட் அணி, 04:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

# கிளியூர் கிங்ஸ் அணி வெற்றி



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில், 8 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. லீக் ஆட்டத்தின் 44 ஆவது போட்டியில் கிளியூர் கிங்ஸ் அணியை எதிர்த்து அம்பாறை அவஞ்சேர்ஸ் அணி மோதியது.

முதற்சுற்றில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியாட்டத்தில், 62 ஆவது நிமிடத்தில் கிளியூர் அணியின். கண்ணன் தேனுசன் முதலாவது கோலை அடித்தார். தொடர்ந்து. 69 ஆவது நிமிடத்தின் எஸ்.ஜென்தரீபன் அடுத்த கோலை அடித்தார். முடிவில் கிளியூர் கிங்ஸ் அணி. 02:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)



றெயின்போ வி.க நடத்திய ஒருநாள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் றெயின்போ எதிர் நேதாஜி அணிகள் மோதின. மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் நேதாஜி வெற்றி பெற்று சம்பியனானது. (க)



ஐக்கிய தேசிய கட்சி இளைஞர் பாராளுமன்றம் அகில இலங்கை ரீதியாக கொழும்பில் நடத்திய **social media challenge trophy** 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இறுதி போட்டியில் கம்பஹா அணியுடன் இறுதி வரை போராடி 5 ஓட்டங்களால் தோல்வியடைந்து இரண்டாம் இடத்தைப் பெற்றது கார்மேல் போய்ஸ் அணி. தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக செல்ரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை பிற்பகல் 6.30 தொடக்கம் 9.30 மணிவரை சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற உள்ளது என யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (க)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்



புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம் ஒளிநிலா முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா நிலையத் தலைவர் வே.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் சி.ஜெயகாந், சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் இ.அரிகரன் மற்றும் செல்வி காயத்திரி, கிராம உத்தியோகத்தர் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-சக்தி)

## திருப்பதிக்கு பலாலி...

இதனைத் தெரிவிக்கின்றன.

குறித்த விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைப்பதற் கான வேலைத்திட்டங்கள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இதற்காக முதற்கட்டமாக இந்திய அர சாங்கத்தினால் 100 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கி வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட கிறது.

அத்துடன் இந்தவிடயம் தொடர்பில் பிரத மர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அதிகாரிக ளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதாக வும், விரைவில் இந்திய விமான சேவைகள் குழு ஒன்று பலாலிக்கு சென்று ஆய்வுகளை நடத்தும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாக இந்தியாவிற்கான விமான சேவை நடத்த ப்படுமாக இருந்தால், வடக்கில் இருந்து இந் தியா செல்வோரின் செலவுகள் குறைவடை வதுடன், வடமாகாணத்துக்கான வருவாயும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம், பலாலியில் இருந்து மலேசி யாவிற்கான விமான சேவையும் நடத்தப்ப டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

## மின்சாரத் தடை...

மூலம் மாணவர்களின் பரீட்சை பெறு பேற்றை வீழ்ச்சியடைய செய்கின்ற சதி வேலை தொடர்ச்சியாக நடைபெறுகிறது எனக் குற்றஞ்சாட்டியுள்ள பெற்றோர்கள்.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதல மைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோர் சம்பந்த ப்பட்ட அதிகாரிகளிடம் விளக்கம் கேட்க வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

தொடர்ந்து மின்தடை ஏற்படுமாயின் மின்சார சபைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நட த்தப்படும் என்று உயர்தர பரீட்சைக்கு தோற் றும் மாணவர்களின் பெற்றோர் எச்சரித்து உள்ளனர். (ம)

## லண்டனிலிருந்து வருகை...

லண்டனிலிருந்து வருகை தந்த மகளை அழைத்து வருவதற்காக தும்பளையில் உள்ள தாய் தந்தை உட்பட மூவர் கொழும்பு சென்றுள்ளனர். லண்டனிலிருந்து மகள் தனது இரு பிள்ளைகள் மற்றும் கணவரு டன் நேற்று வந்துள்ளார்.

கொழும்பு, கட்டுநாயக்கா விமான நிலை யத்தில் இருந்து பருத்தித்துறை தும்பளை நோக்கி இவர்கள் பயணித்த ஹயஸ் வாக னம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் மின்சார கம்பங்கள் ஏற் றப்பட்டிருந்த கனரக வாகனத்துடன் மோதி விபத்திற்குள்ளானது.

இந்த கோர விபத்தில் ஹயஸ் வானின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்தது. வாகன த்தில் பயணித்த 8 பேரில் 7 பேர் படுகாய மடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் தும்பளையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் இமானு வேல் மேரிலூயிஸ் அன்ரனிஸ் (வயது-42) கிளிநொச்சி வைத்தியசாலையில் உயிரிழ ந்துள்ளார்.

லண்டனில் இருந்து இலங்கைக்கு வந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான சுதாக ரன் பிரசாந்தி (வயது-41) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்ட போது உயிரி ழந்துள்ளார்.

வாகன சாரதி கிளிநொச்சி வைத்தியசா லையிலும், தாய், தந்தை மற்றும் இரு பேரப் பிள்ளைகள் ஆகியோர் யாழ் போதனா வைத் தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின் றனர். உயிரிழந்த குடும்ப பெண்ணின் கண வர் காயங்களுக்குள்ளாகவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (ம- 9,19,60,281,312,315,30)

## பவுசருடன் மோட்டார்...

நிலையில் யாழ்.போதனா வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி சங்கத்தானையை சேர்ந்த நகைக்கடை உரிமையாளரான ஸ்ரீரஞ்சன் (வயது-44) என்பவரே பரிதாபமாக உயிரிழ ந்ததுடன், அவருடைய மகளாகிய கீர்த்திகா (வயது 13) என்பவர் காயமடைந்தவராவார்.

கோப்பாயிலிருந்து கைதடி நோக்கி குறி த்த நபரும் மகளும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்துள்ளனர். அவர்க ளின் பின்னால் பயணித்த எரிபொருள் பவுசர் இவர்களை கடந்து செல்ல முற்பட்ட போது மோட்டார் சைக்கிளில் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியில் அதிக காற்று காரண மாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என சம்பவத்தை பார்த்தவர்கள் தெரிவித்த னர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கோப் பாய் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (ம-9,30,101)

## வன்முறையுடன் தொடர்பு...

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட் டம் நேற்று யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு குடாநாட்டின் தற்போதைய சட்ட ஒழுங்குகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கடந்த இரு வாரங்களுக்குள் யாழ்.குடா நாட்டில் 5 பெரும் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றன. வீடுகள் சேதமாக்கப்பட்டு பெரும் பொருட்சேதம் ஏற்படுத்தப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவ ர்களில் குற்றச்செயல்களில் ஈடுபடுவோரு டன் நேரடி தொடர்பில் உள்ள 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களிடம் விசா ரணை மேற்கொண்டதில் மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டு சிறையில் அடைக் கப்படுபவர்கள் சிறிது காலத்தின் பின்னர் பிணையில் வருகிறார்கள். அவர்கள் மீண் டும் குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

போதைப்பொருள் வியாபாரம் சுன்னா கம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதி களவு இடம்பெறுகிறது. அங்கிருந்து யாழ்ப்பா ணத்துக்கு கொண்டுவரப்படுகிறது. அது தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டுள்ளார் கள். அதில் முக்கிய நபரை விரைவில் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

குற்றங்களை தடுப்பதற்கு விசேட வித மாக அனைத்து பொலிஸ் பிரிவுகள், பிரதேச செயலர், கிராம அலுவலர் பிரிவுகள் ஊடாக செயற்பாடுகள் மேற்கொள்ளவுள்ளோம். அதன் மூலம் குற்றங்களை தடுப்பதற்கு நட வடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளோம்.

மேலும் பொலிஸ் நிலையங்களில் ஆளணி பற்றாக்குறை, போக்குவரத்து பிர ச்சினைகள் அதிகம் உள்ளன. அது தொடர் பாக அறிவித்துள்ளோம். குறிப்பாக மொழிப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகவுள்ளது. பொலிசாருக்கு தமிழ் மொழி 6 மாத வகுப்பு கொத்மலையில் இடம்பெறவுள்ளது. அங்கு பயிற்சி பெறும் பொலிஸார் வடக்கு கிழக்குக்கு நியமிக்கப்படவுள்ளார்கள். இவ்வாறு படிப் படியாக பிரச்சினைகளை குறைப்பதற்கு நடவ டிக்கை எடுத்து வருகிறோம். பொதுமக்கள் ஊடாக எமக்கு தகவல் அதிகமாக வேண் டும். எம்முடன் தொடர்பாடல் இருக்க வேண் டும்எனமேலும் தெரிவித்தார். (ம-9)

## வன்முறை கலாசாரத்தை...

இளைஞர்கள், மாணவர்கள் பலர் இந்த வலையமைப்புக்குள் உள்ளீர்க்கப்பட்டு சட்ட விரோத செயல்களை செய்து வருகிறார்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-9)

# இலங்கையின் அடையாளத்தை நாம் சர்வதேசம் வரை கொண்டு செல்ல வேண்டும்

## சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டம் அனைத்து இனத்தவர்கள் மீதும் சமமாக பிரயோகிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் ஒரு தலைபட்சமாக நடந்து கொண்டால் பெரும்பான்மையானாலும் சிறு பான்மையானாலும் நாட்டின் மீது அதிரு ப்தியே ஏற்படும் என எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடு கையில்,

நாட்டில் வாழும் அனைத்து இனத்தவர் களின் அபிலாஷைகளை நாம் உறுதிப்படு த்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தும் போதே சீரான நாட்டை எம்மால் உருவாக்க முடியும். அதற்காக நாம் முயற்சிகளை செய்ய வேண்டும். ஆகவே அனைத்து இனத்தவர்க ளின் அபிலாசைகளை மதிக்கும் நாடாக இல ங்கையை மாற்றியமைக்க வேண்டும்.

அத்துடன் இலங்கையை போன்று நாம் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் சிங்கப்பூர் செயற்பட்டு தற்போது சர்வதேச அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனால் இலங்கையின் நிலைமை தற்போது கவலைக்கிடமாக மாறியுள்ளது. ஆகவே இந்த நிலைமையை நாம் மாற்ற வேண்டும்.

ஆகவே இலங்கையின் அடையாளத்தை நாம் சர்வதேசம் வரை கொண்டு செல்ல வேண்டும். இதன்படி அனைத்து இனத்தவ ர்களும் ஒற்றுமையாக இலங்கையராக வாழ்ந்தால் இலங்கையை முன்னேற்ற முடி யும். இதனூடாக சர்வதேச சவால்களை எம் மால் வெற்றிகொள்ள முடியும் என்றார். (ம)

## விபத்தில் 13 பேர்...

ளிலிருந்து 13 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மூன்று பேர் நீராடச் சென்று நீரில் மூழ்கி இறந்துள்ளதுடன் ஆறு பேர் மோட்டார் வாகன விபத்தில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊறுபொக்க-மெக்கியதென்ன-தித்தெ னிய பிரதேசத்தை சேர்ந்த 20 மற்றும் 22 வயதுடைய சகோதரர்கள் இருவர் நேற்றைய தினம் கடலில் நீராடச் சென்றதில் உயிரிழ ந்துள்ளனர்.

அத்துடன் அம்பலாந்தோட்டை மாமடல பிரதேசத்தில் நீராடச் சென்றதில் இரண்டு பிள்ளைகள் உட்பட நபரொருவர் உயிரிழந்து ள்ளார்.

மேலும் எம்பிலிப்பிட்டி, கிரிஉல்ல, யட்டின் தொட்டை, மீகஹதென்ன, தந்திரிமலை மற் றும் திக்வெல்ல ஆகிய பிரதேசங்களில் மோட் டார் வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இயக்கச்சி பிரதேசத்தில் இடம் பெற்ற ஹயஸ் விபத்தில் இருவர் உயிரிழந்து ள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டு ள்ளது. அதனை தொடர்ந்து அம்பலங் கொடை ரயில் நிலையத்து அருகாமையில் பய ணித்த 18 வயதுடைய பாடசாலை மாணவியொருவர் ரயிலில்மோதுண்டு விப த்துக்குள்ளானதில் நேற்றையதினம் உயி ரிழந்துள்ளார். மேலும் கோப்பாயில் இடம் பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரி ழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சுயநல அரசியல்வாதி...

குடியேற்றம், புனர்வாழ்வு, இந்து மத விவகாரம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமை ச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இன, மத சகவாழ்வின் ஊடாக நிலையான நாடு என்ற தொனிப்பொருளின் கீழ் விசேட மாநாடொன்று நேற்று கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் உரையாற்று கையில்,

நாட்டின் நல்லிணக்கம் வரலாற்று தொட க்கம் சீராக காணப்பட்டாலும் சுய இலாபத்தி ற்காக அரசியல்வாதிகள் தெரிவிக்கும் கரு த்துகளின் விளைவாகவே இலங்கையில் நல்லிணக்கம் சீர்குலைவதற்கு பிரதான கார ணமாகும். ஆகவே இந்த சூழலை நாம் மாற்றி அமைக்க வேண்டும். இல்லையேல் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாமல் போகும்.

என்னுடைய ஒத்துழைப்பினால் இரு விகாரைகள் நிர்மாணிப்பதற்கு உதவிக் கரம் நீட்டியுள்ளேன். அதுபோன்று நாட்டில் வாழும் பெரும்பான்மையானோர் சகவாழ்வுடன் வாழ வேண்டும். மனிதர்கள் யாவரும் தர்ம த்தை பின்பற்றி நடக்க வேண்டும். தர்மத்தை வழிதவறவிட்டு சென்றோமானால் நல்லிண க்கம் பாதிப்புறும் என்றார். (ம)

## வெளிநாடு செல்ல முயற்சி...

பேரை இலங்கை கடற்படையினர் நேற்று திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் கொழும்பிலிரு ந்து 117 கடல் மைல் தொலைவில் வைத்து கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணி த்த படகையும் கைப்பற்றியுள்ளதாக கடற் படை பேச்சாளர் தினேஷ் பண்டார தெரிவித் துள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு துறைமுக பொலிஸில் ஒப்படைக்க ப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டு ள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக கடற் படையினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## கருணாநிதி கவலை...

உடல் நிலை குறித்து காவேரி மருத்துவ மனை நேற்று திங்கட்கிழமை மாலை அறி க்கை வெளியிட்டுள்ளது. அவரது வயது மூப்பு காரணமாக முக்கிய அவயவங்களை தொடர்ந்து செயல்பட வைத்து பராமரிப்பது சவாலாக உள்ளதாகவும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

தொடர்ந்து அவரது உடல்நிலை குறித்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் மருத் துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

மேலும் அடுத்த 24 மணி நேரத்துக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகளுக்கு அவர் உடல்நிலை தரும் ஒத்துழைப்பைப் பொறுத்தே எதையும் கணித்துக் கூறமுடியும் எனவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையால் தி.மு.க தொண்டர் கள் கவலையடைந்துள்ளனர். இந்நிலையில் அவரின் உடல் நலம் பெற வேண்டும் என பிரார்த்தித்து தொண்டர்கள் அப்பகுதியில் குவிந்துள்ளனர்.

இதனால் குறித்த பகுதிக்கான வாகன போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ள நிலை யில் மாற்று வழியை பயன்படுத்துமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



மெகா பவர்
திகதி 06/08/2018
சீட்டிழுப்பு இலக்கம் 262
M 19 20 45 70 72

மஹஜன சம்பத
திகதி 2018/08/06
சீட்டிழுப்பு இலக்கம் 3718
J 6 5 3 1 8 4

சுபிரி வாசனா
திகதி 2018/08/06
சீட்டிழுப்பு இலக்கம் 1349
13 02 11 16 44 59 23

கொவிசெத
திகதி 2018.08.06
சீட்டிழுப்பு இலக்கம் 1843
U 20 38 59 61

# வட மாகாண G.C.E (O/L) க.பொ.த (சா/த) மாணவர்களுக்காக கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் வழங்கப்படும் முற்றிலுமான இலவசக் கருத்தரங்கு

**நேரசூசிகை**

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 09.08.2018 வியாழன் | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | காலை 8.30 - பிற்பகல் 3.00 |
| 10.08.2018 வெள்ளி | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | காலை 8.00 - பிற்பகல் 3.00 |
| 11.08.2018 சனி | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்களுக்கு மட்டும்) | காலை 6.30 - பிற்பகல் 3.30 |
| 12.08.2018 ஞாயிறு | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண்களுக்கு மட்டும்) | காலை 6.30 - பிற்பகல் 3.30 |
| 13.08.2018 திங்கள் | யாழ். வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை 6.30 - பிற்பகல் 3.00 |
| 14.08.2018 செவ்வாய் | கிளிநொச்சி பல நோக்கு கூட்டுறவு மண்டபம் (A9 வீதி அருகில்) | காலை 8.00 - பிற்பகல் 3.00 |
| 15.08.2018 புதன் | கற்சிலைமடு அரசினர் கலவன் பாடசாலை (அ.த.க) | காலை 8.00 - பிற்பகல் 3.00 |
| 16.08.2018 வியாழன் | மன்னார் நகரசபை மண்டபம் | காலை 8.00 - பிற்பகல் 3.00 |
| 17.08.2018 வெள்ளி | வவுனியா நகரசபை மண்டபம் | காலை 8.00 - பிற்பகல் 3.00 |

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | 1. வே.தேவசேனாதிபதி LLB, சட்டத்தரணி<br>2. K.வசந்தன் (Trained Teacher Colombo)<br>3. S.மணிமாறன் (Trained Teacher Jaffna)<br>4. M. லிங்கேஸ்வரன் B.Sc, PGDE, Teacher St.John's College Jaffna |
| விஞ்ஞானம் | 1. வே.சுந்தரேஸ்வரன் Rtd. D.G.M தேசிய லொத்தர் சபை<br>2. V.பிரேம்குமார் P.H.I யாழ்ப்பாணம்<br>3. N.மகேந்திரன் (Trained Teacher Jaffna) |
| தமிழ், வரலாறு | 1. S.நடராஜா B.A (Hons) |

- நூல்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- அனைத்து பாடமும் அடங்கிய Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- கடந்த கால வினாவிடைக் கொத்து இலவசமாக வழங்கப்படும்.

"அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறவும்"

**இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர்**
**சட்டத்தரணி வே. தேவசேனாதிபதி LLB**
**தொ.பே இல.: 0771133400, 0112327524**

தொடர்பு:
1) பே.இளமுருகன் B.Sc - 0779073593 2) ஆ.முருகானந்தன் - 0718561252
3) கே.சக்திதரன் AD - 0778429649 4) எஸ்.ஐங்கரன் - 0777157779

(5221)

குறிப்பு: அனைத்து மாணவர்களும் (இருபாலாரும்) கண்டிப்பாக பாடசாலை சீருடையில் வருகை தருதல் வேண்டும்.



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



(C-3398)
DELIVERY IN 3-5 DAYS -
UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELs


## எதிர்க்கட்சி பதவி...

வர் பதவி தொடர்பான அறிவிப்பை சபாநாயகர் கரு ஜயசூரிய இன்று வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படும் நிலையில், கண்டியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிரணியில் அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்ட குழுவாக தாம் இருப்பதால் தமக்கே எதிர்க்கட்சிப் பதவி வழங்கப்பட வேண்டும் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தொடர்ச்சியாக கோரிக்கையை முன்வைத்து வருகிறது.

இது தொடர்பில் எழுத்துமூல கோரிக்கையை முன்வைத்தால் ஆராய்ந்து பார்க்க முடியும் என சபாநாயகர் முன்னர் அறிவித்திருந்தார். இதற்கமைவாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எழுத்து மூலம் கோரிக்கைவிடுத்தது.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாட்டை சபாநாயகர் கேட்டறிந்தார். இதற்கமைய தமது கட்சியின் நிலைப்பாட்டினை அறிவிப்பதாக அக்கட்சியின் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர கூறியுள்ளார்.

தம்மை அங்கீகரிக்காவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவர இருப்பதாகவும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா குறிப்பிட்டார்.

அதேநேரம், ஐ.ம.சு.மு எடுக்கும் தீர்மானத்துக்கு அமைய எதிர்காலத்தில் அவர்கள் பாரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி சட்டத்துறை நிபுணர்கள் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு பாராளுமன்றத்தில் தனியான கட்சி அங்கீகாரம் இல்லையெனச் சுட்டிக்காட்டியிருப்பதுடன், அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வது பொருத்தமானதாக இருக்காது என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனும், எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பாக சபாநாயகரே தீர்மானம் ஒன்றினை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## விபத்தின்போது...

பேசியை திருடிச்சென்ற சம்பவம் நேற்று இயக்கச்சியில் இடம்பெற்றுள்ளது.

ஏ9 வீதி இயக்கச்சி பகுதியில் நேற்று பாரவூர்தியுடன் ஹயஸ் வாகனம் மோதி கோர விபத்து இடம்பெற்றது.

அதில் படுகாயமடைந்த நிலையில் இருந்தவர்கள் அங்கு விபத்தை பார்க்க வந்த நபரிடம் தமது குடும்பத்திடம் தகவலை தெரிவிக்குமாறு கோரி தமது தொலைபேசியை கொடுத்துள்ளனர்.

தொலைபேசியை பெற்றுக்கொண்ட நபர் மனிதாபிமானமின்றி அதை திருடிச்சென்றுள்ளார். குறித்த சம்பவத்தை உயிரிழந்தவரின் தகப்பனார் மரண விசாரணையின் போது தெரிவித்திருந்தார். (ம-9)


மாபெரும் இசைநிகழ்ச்சி



அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்

ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.

ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.

Rs.300/=, Rs.500/=, Rs.1000/= மற்றும் VIP ரிக்கட்டுக்கள்.

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)

(C-3395)



துரித தபால்கள் பொதிகள் சேவை

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

(C-3398)

3-5 வேலை நாட்களில்

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(முட்டாஸ் கடை சந்திக்கு அருகாமையில்)
Hotline -0777554528



PERSONAL CLASS
Physics A/L - 2020

● "அலைகளும் அதிர்வுகளும்"
ஆரம்பம்: 08.08.2018 புதன் மாலை 6 மணி
ஆசிரியர்: திரு.ம.ஸ்பெல்மன் (BSc, PGDE)
இடம்: 10/10 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில் அருகாமை)
தொ.பே: 077 611 6724

● விரும்பிய பகுதியைக் கற்பதற்கு
✦ Personal Class ஆகவும்
✦ Group Class ஆகவும்
கற்க விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(5278)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.